205

ஜகன் மோகினி

ஏப்ரல் 1953

JAGAN MOHINI

ESTD. 1923

அணா நான்கு

D

A

C

E

B

சிவபக்தை காரைக்கால் அம்மையார் விக்ரகங்கள்

அரிய தமிழ் விருந்து

உதயசூரியன்

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
முதல் நவீனம் - ரூ. 1-4-0

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச்சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்யபாரமும் 8. காதல் போதனை—கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11. இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்டவானம் 15. உதய சூரியன். [ஸ்ரீசுத்தானந்தரின் முகவுரையுடன்.]

மதமா, மனமா?

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. கண்கொள்ளாக் காட்சி 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணாடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப்போம் 14. உயிர் நிலை — உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4. பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தணமளி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15. ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.

காணத்தகுந்த சில காரைக்கால் அம்மையார் விக்ரகங்கள்

சிவபெருமானின் அபூர்வ சிற்பமொன்றைச் சென்ற [illegible]ழில் கண்டோம். சிவ பக்தர்களுள் சிறந்த ஸ்தானத்தை வகிக்கும் காரைக்கால் அம்மையாரைக் குறித்த சில விக்ரகங்களை இப்போது கவனிப்போம்.

சுந்தரமூர்த்தி நாயனார் குறிப்பிட்டுள்ள சிவனடியார் அறுபத்துமூவரில் பூதவதி என்னும் காரைக்கால் அம்மையார் காரைக்கால்—பேய்—அம்மையார், காரைக்கால் பேயார் என்றும் அழைக்கப்படும் பக்தை ஒருவராவர். சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பிற்பட்ட சிவனடியார் பத்துப்பேர் உண்டு. அதனால் தற்காலம் சுமார் 73 நாயன்மார்களுடைய விக்ரகங்களைப் பெரிய சிவஸ்தலங்களில் பார்க்கிறோம். (சென்றவாரம் சென்னை மயிலையில் அறுபத்துமூவர்த் திருநாளன்று பவனி வந்ததைக் கண்டோமல்லவா?)

சிவனடியார்களின் எண்ணிக்கை எங்ஙனம் 63 என்று நிர்ணயிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால் ஒரு ருசிகரமான விஷயம் என்னவெனில் ஸம்ஸ்கிருதத்தில் ஹாலாஸ்ய மஹாத்மியம் சிவபெருமானுடைய 63 லீலைகளைக் குறிப்பிடுகிறது; அதேபோல் ஜைனர்களும் தங்களது அடியார்களின் தொகையை 63 என்றே "த்ரிஷஷ்டி சாலக புருஷர்" என்றே குறிப்பிடுகின்றனர்.

அம்மையாரின் பக்திப் பெருக்கானது அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, மூத்த திருப்பதிகம், திருவாலங்காட்டுத்திருப்பதிகம் என்ற பாமாலையாக வெளியாகி, பதினோருந்திருமுறையில் இடம் பெற்றது. "திருப்பதிகம்" என்ற கவிமுறையைச்சிவனடியார்களுள் முதல்முதல் கையாண்டவர் இந்த அம்மையே. சைவசமய நெறியுரைப்படிச் சிவ பக்தர்களுள் முதல் ஸ்தானம் இந்த அம்மையாருக்கே அளிக்கப்படுகிறது.

11-வது நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் தஞ்சைக்கோவில் கல்வெட்டில் (கெ. 66.) கோவில் கைங்கர்யம் செய்யும் பெண்ணின் பெயர் "காரைக்கால்" என்று உள்ளது, "சிதம்பரம்" என்பதுபோல. அக்காலத்திலேயே ஸ்ரீ அம்மையாரின் பெயர் எவ்வளவு தூரம் மக்களிடையே பரவியிருந்த தென்பதை இது காட்டுகிறதல்லவா?

சிவனடியார்களின் விக்ரகங்களை முதல்முதல் ப்ரதிஷ்டை செய்த பெருமை முதல்ராஜராஜ சோழனைச் சார்ந்தது. பிரஸித்தமான தஞ்சை ஆலயத்தை 11-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அவர்தான் கட்டினார்.

சிவபக்தர்களின் சரித்திரங்களைத் தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும் பல நூல்கள் விவரிக்கின்றன. அவற்றுள் ஸ்காந்த புராணம், சிவரஹஸ்யம், சிவபக்த மஹாத்மியம் முதலியவை ஸம்ஸ்கிருதத்திலும், பெரிய புராணம் தமிழிலும் பிரஸித்தம்.

அம்மையாரின் விக்ரகங்கள் ஐந்தை இவ்விதழில் வெளியிட்டுள்ளோம். அவைகளின் அமைப்பை நன்கு அறிய அவரது வாழ்க்கை வரலாறு ஓரளவாவது தெரிந்திருக்கவேண்டும். அம்மையாருக்குப் பேய் என்ற பெயரும் அம்மை என்ற பெயரும் வந்த சரித்திரத்தைப் பெரிய புராணப்படிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஒருதினம் தனக்குப் பரிசாகக் கிடைத்த இருமாங்கனிகளை அவரது கணவர் வீட்டுக்குக் கொடுத்தனுப்பினார். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு சிவனடியார் பசியுடன் வந்தார். அவருக்கு அன்னமிட்டு, ஒரு மாங்கனியையும் அளித்தாள். அவர் சாப்பிட்டுச் சென்ற பிறகு அவளது கணவர் புசிக்க வந்தார். அவருக்கு மாங்கனி மிகவும் ருசிக்கவே மற்றொன்றையும் தனக்கே இச்சித்தார். பக்தை சிவபெருமானை வேண்டி அவரருளால் ஓர் கனியைப்பெற்று அதைக் கணவனுக்குப் பரிமாறினாள். அமுதினும் மிக்க சுவையுடன் அது இருந்ததைக் கண்ட கணவன் பிரமிப்புடன் விவரத்தை வினவினான். உண்மையை ஒளிக்காது அவள் சொன்னாள்; ஆனால் அவன் நம்பவில்லை. "அது உண்மையாயின் மீண்டும் ஒரு கனியை வரவழை, பார்ப்போம்!" என்றான். அந்த அற்புதத்தைக் கண்ணெதிரே நிகழ்த்திக்காட்டினாள் பக்தை.

இதுவரை மனைவியாக எண்ணிவந்த அவளை ஓர் தெய்விகப் பிறவியாகவும், அடிபணிய வேண்டிய புனிதையாகவும் கருதினான் கணவன். இந்த மனமாற்றத்தின் பயனாய்க் கண்காணாத தேசத்திற்குச் சென்று அங்கு வேறொருத்தியை மணந்து, தனது முதல் மனைவியை மானஸிகமாய் வழிபட்டு வந்தான்.

அம்மையார் தன் உறவினர்களின் உதவியுடன் கணவனைத் தேடிப் பிடித்தாள். ஆனால் அவன் தனது சிட்டனை வரலாறு அவளுக்குத் தெரியாது. இவளைக் கண்டதும் காலில் விழுந்து வணங்கினான் சிட்டனை கணவன்! தன் உள்ளத்தைத் திறந்தும் காட்டினான்.

"கணவனுடைய மன உவப்புக்காகவே சரீரத்தில அழகைத் தாங்கிவந்தேன்; அவருக்கு உதவாத அந்த அழகைப் போக்கி, ஒருவரும் விரும்பாத ஓர் பெண் பேய் ரூபத்தைக் கொடு!" என்று சிவபெருமானைப் பிரார்த்தித்து அங்ஙனமே பேயுருவைப் பெற்று அவ்விடம்விட்டு அகன்று, கைலயங்கிரியையடைந்து, அங்கு பக்திச் சிறப்பால் சிவபெருமானால் "அம்மையே!" என்று அன்புடன் அழைக்கப்பட்டார். திரு

183176.

வாலங்காட்டில் தான் ஆனந்த நடனமாடும்போது தன் திருவடிவாரத்தில் விளங்கிக் குதுகலிக்கும்படியும் ஆசிர்வதித்தார்.

ஆகமவிதிப்படி பக்தர்களின் திருவுருவங்கள் கல்லிலோ, உலோகத்திலோ, மரத்திலோ, ரத்னங்களாலோ பாதி "அர்த்த சித்ர"மாகவோ அல்லது வட்ட முழுசித்ரமாகவோ செதுக்கப்படலாம். பத்மாஸனத்தில் அமர்ந்து, தாளங்களுடன் பாடுவதாகவும், ஆண் அல்லது பெண் என்பதற்கேற்ப உடை, சிகை, ஆபரணங்களுடனும் காணப்படுகின்றன. பைசாசங்கள் ஓரே எலும்புக்கூடாகவும், கட்டைகட்டையான ஜடையுடனுமிருக்குமென்பது ஆகம வருணனை.

மூத்த திருப்பதிகத்தின் முதல் பாட்டிலேயே தன்னை ஒரு பெண்பேய் என்று அம்மையார் வர்ணித்துள்ள விவரத்தைப் பாருங்கள்: இங்கு வெளியிட்டுள்ள விக்ரஹப்படத்தையும் கவனியுங்கள். "சுருங்கி தொங்கும் மார்பும், மேலெடுத்துத் தெரியும் எலும்புகளும் நரம்புகளும், குழிவிழுந்த கண்களும், வெண்மையான பற்களும், ஒட்டிய தொந்தியும் குறுகிய இடையும், செஞ்சடையும் கொண்ட ஒரு பெண்பேய் அப்பன் ஆடும் திருவாலங்காட்டு ருத்ரபூமியில் திரிவதைக்கண்டீரே!"

இங்கு வெளியிட்டுள்ள ஐந்து விக்ரகங்களும் தஞ்சைஜில்லாவில் கிடைத்தவை; சைவ அடியார் வழிபாட்டில் அந்த ஜில்லாவே மூழ்கிக்கொண்டுள்ளது. A திருக்கடையூரிலிருந்தும் B சியாழியிலிருந்தும், C நாகப்பட்டிணத்திலிருந்தும், D திருத்துறைப்பூண்டியிலிருந்தும், E திருவாரூரிலிருந்தும் கிடைத்தவை; தற்போது ஆராதனையிலில்லை.

விக்ரகங்களின் அமைப்பிலிருந்து முதல் விக்ரகம் 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது (விஜய நகர பாணி), இரண்டாவது, 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்றும், மற்றையமூன்றும் 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும் ஏற்படுகிறது.

அம்மையாரின் அழகிய திருவுருவத்தை முதல் விக்ரகத்திலும், அதை உதறித்தள்ளிப் பேய்க்கோலம் மேற்கொள்ளுவதை இரண்டாவது விக்ரகத்திலும் காண்கிறோம். மற்றை மூன்றும் பேயுருவத்தையே பக்தையாகவும் சித்திரிக்கின்றன. D தவிர மீதியில் கழுத்தில் ஆபரணங்கள் உள்ளன.

ஈஜிப்ட் (எகிப்து) தேசச்சிற்பத்தை யொத்திருக்கிறது E விக்ரகம். சில காந்தார புத்த சிற்பங்களை யொத்திருக்கின்றன C, D, E மூன்றும். Dயில் உள்ள நிலை அம்மையாரின் பாடல் வர்ணனையைப் பிரதிபலிக்கிறது.

இவற்றைப் போன்ற பல அபூர்வ விக்ரகங்கள் அனேக கோயில்களில் காணப்படுகின்றன: இருப்பது தெரியாமல் இருக்கின்றன. கோவில் அதிகாரிகள் விசேஷ ச்ரத்தையெடுத்து இத்தகைய விக்ரகங்களை—சரித்திரத்தையும் சிற்பக்கலையையும் விளக்கும் பொக்கிஷங்களை—உரிய மதிப்புடன் விளங்கும்படிச் செய்வார்களாக! [தமிழாக்கம்: வை. மு. ஸ்ரீ.]

திருப்பள்ளியெழுச்சி

ஏ. ராஜம்மாள்

ராகம்: மாலிகை

பூபாளம்

தாளம்: ஆதி

லகு	த்ரு	த்ரு
, , கக — கா கா — பா பா — பா கா	தா பா — பா தா	பதநித — தபபா
. . கதி — ர வன் — கு ண — தி சை	சி க — ரம் வங்	த . ணை . — ந் தான்
, , கக — கா கா — பா பா — தா பா	கா கா … கபதப	நரீ ரீ — ஸா ஸா
. . கன — வி . ரு — ள . கன் — ற . து .	கா . . — லை . யம்	பொ . ழு — தா . ய்
, , கக — கா கா — கா பா — கா ரீ	ரீ . ரீ — ரீ ஸா	ஸரிகரி — ரிஸஸத
. . மது — வி . ரிக் — தொழு — கி . ன	மா . = ம ல	ரெல் . . — லா . . ம்
, , ஸரி — , ஸ ரீ — கா கா — கபகரி	கா பா = பா பா	பாதா — தபபா
. . வா — . ன வ — ர . ா . — சர்கள்	வ . ங். — து . வங்	தீண் — டி . . .
, , தப — தா பா — பா பா — பதபக	பா தா — பா தா	ஸா ஸா — ஸா ஸா
. . எதிர் — தி . சை — நிறை — ந் த . னர்	இ . வ . … ரொடும்	பு . குந் — த . . .
, , ஸ்ரி — கா, கா — கா கா — கபகரி	ரீ ரீ … ரீ ரீ	ஸ்ரிகரி — ரிஸஸா
. . இருங் — க ளி — ற்றீ . — ட்ட . மும்	பி டி … யொடு	மு . . ர . — சு . . ம்
, , பத — , ப தா — பதகக — ரிரி ஸா	நீ நீ … ஸ்ரிஸ்ரி	ஸ்நிநித — தபபக
… அதிர் — . த லி — ல . லை . — கடல் .	போன் … று . ள .	தெங் . . — கு . ம்
, , கா — பா தா — ரிஸ்நித — தபபா	கா கா … கபதப	கரிரீ — ஸாஸா
. . அ . — ரங் . க . — த்த . . . — ம்மா .	பள்ளி … யெ . ழுங்	த . ரு — ளாயே
ஸா	வேரி	
, , மம — மா மா — மாமா — மாமா	மபபம … பதபம	காகா — மககரி
. . கொழுங் — கொடி — முல்லை — யின்	கொழு … ம . ல .	ர . ண — விக் . .
, , ஸரீ — , ஸ ரீ — மாமா — மாமா	பா பா … பா மா	பாதா — பாபா
. . கூ . — ர்ந்தது — கு . ண — தி . சை	மா . . . …. ரு . த .	யிது — வோ . .
, , மம — , ம மா — பாதநி — தபதம	பதநிஸ் … நிதபம	காகா — ரீ ரீ
. . எழுந் — . த ன — ம ல . — ர . ணை.	பள்ளி . …. கொன் .	ளன் . — னம்

,, ஸ ரி — , ஸ ரீ —ம ா ம ா — ம ா ம ரி | ப ா ப ா ... ப ா ப ம | ப ா த ா — ப ா ப ா ||
. . ஈ ன் — . ப னி —க . ணைக் — த . த . | மி . ருஞ் ... சி . ற . | சூ த — றி . . . ||
,, ப த — ப ா த ா —ப த ரி ஸ் — நி த ப ம | ப ா த ா ... ப ா த ா | ஸ் ா ஸ் ா — ஸ் ா ஸ் ா ||
. . விழு — ங் கி ய —மு . த . — லை . யி ன் | பி . ல ம் ... பு ை ர | பே . . . — வ ா ய் ||
,, ஸ் ரி — க ா க ா —க ா க ா — க ா ரீ | ரீ ரீ .... ரீ ரீ | ஸ் ரி க ரி ... ஸ் ா ஸ் ா ||
. . வெள் — ளை . யி —று . ற — வ . த ன் | வி ட ... த்தி னுக் | க னு ங் ... கி . . . ||
,, ப த — ப ா த ா —ப த த க — ரி ரி ஸ் ா | நீ நீ ... ஸ் ரிஸ்ரி | ஸ் நி க ா ... த ப ப ம ||
. . அதிர் — த . வி —ல . லை . — . க டல் | போ ா ன் ... று . ள . | தெங் . . ... கு . . ம் ||
,, ம ா — ப ா த ா —ரி ஸ் நி த — த ப ப ா | ம ா ம ா ... ம ப ப த | ப த ப ம ... ம க ரி ஸ ||
. . அ . — ர ங் க —த்த . . ம் — ம ா . . . | ப ள் ளி ... யெ . ழுங் | த . ரு . ... ள ா யே . ||

தன்யாசி

,, க ம — க ா ம ா —ப ா ப ா — ப ா ப ா | ப நி நி ப ... ப நி ஸா | நி த தா ... ப ா ப ா ||
. . சு ட — ரொ ா ளி —ப ர ங் — த ன | சூ . . ழ் ... தி - சை | யெல் . . ... ல ா ம் ||
,, க ா — க ா ம ா —ப ா ப ா — ஸ் நி த ப | க ா க ா ... ம ப த ப | ம க ரீ ... ஸா ஸ ா ||
,, துன் — னி ய —த ா . . — ர . கை . | மின் . . ... ஞெளி | சு . ருங் ... கி . . . ||
,, ஸ க — ரீ ஸ ா —ஸ ா ஸ ா — ஸ ா ஸ ா | ஸ நி ரி ஸ ... நி த பா | ப ா வி ... ஸ ா ஸ ா ||
, . ப ட — ரொாளி —ப . சுத் — த . னன் | ப . னி . ... . ம தி . | யி வ ... ஞெ . . . ||
,, ஸ ம — க ா ம ா —ப ா ப ா — ஸ் நி த ப | ம க ப ம ... த ப ம க | ரீ ஸ ா ... ஸ ா ஸ ா ||
. . ப ா — யி . ரு . ...ள . க ன் — ற . து . | பை . . ம் ... பொழிற் | க மு ... கி ன் . . ||
,, ம ப — க ா ம ா ...ப நி ஸ் ா — நி த ப ம | ப ா நீ ... ஸ் ா ப ா | நீ நீ ... ஸ் ா ஸ் ா ||
, . ம ட — வி . டைக் ...கீ . . . —றி . வ ண் | ப ா . ... ளை . கள் | ந ா . ... ற . . ||
. , க க — ரி ரி ஸ் ா — ஸ் ா ஸ் ா — ரி ஸ் ரி நி | நீ ரி ஸ் ... நி த ப ா | ப ா நி ... ஸ் ா ஸ் ா ||
. . வை . ... . க ை ற ...கூ ர் . . — ந் த . து . | ம ா . . ... . ரு த . | யி . து ... வோ . . ||
,, ஸ் ஸ் ... ஸ ா ஸ ா ...நீ ஸ் நி — த ா ப ா | ம ா ப ம ... கா கா | க ா ம ா ... ப ா ப நி ||
. . அ ட ... லெ ா ளி ...தி க ழ் — த . ரு . | தி . தி . ... ரி . ய ங் | த . ட ... க்கை . . ||
. , ஸ ா ... ஸ நி நி ரி ...ஸ நி த ா — ப ா ப ா | ம க க ... ம ப த ப | ம க ரீ ... ஸ ா ஸ ா ||
. . அ . ... ர ங் க . ...த் த ம் . . — ம ா . . | ப ள் ளி ... யெ . ழுங் | த . ரு ... ள ா யே ||

வாழ்க்கை

முப்பது ஆண்டுகளுக்குமுன் நம்முடைய பழமையான வாழ்க்கை நிலையிலிருந்து மிகுந்த வேற்றுமை ஏற்படவில்லை. ஆங்கிலப் படிப்பு மேம்பாடு அடைந்திருந்தாலும் அது உத்தியோகம்பெறுவதற்கு என்று சமூகத்தில் பரவியிருந்த எண்ணம். பாரதநாடு முழுவதும் ஆங்கிலப் படிப்புப் பரவியிருந்தாலும் தென்னிந்தியாவில் அதிலும் தமிழ்நாட்டில் ஆங்கிலப் பற்றுதலும் அதிகம்: ஆங்கிலத்தில் எழுதும் பேசும் பயிற்சியும் தேர்ச்சியும் திறமையும் வெகு அதிகம். ஆங்கிலம் படித்த மக்கள் ஒருவருக்கொருவர் எழுதும் பொழுதும் சந்தித்துப் பேசும்பொழுதும் ஆங்கிலமே நடைமுறையில் ஏற்பட்டுவிட்டது. திருமண அழைப்புப் பத்திரிகைகள்கூட ஆங்கிலத்தில் தான். பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிப்பதும் கற்றுக்கொள்வதும் ஆங்கிலத்திலேயே; இந்த முறை தேசியப் பண்பாட்டுக்கு முரணானது. அதை மக்கள் இக்காலத்தில் வெறுக்கின்றார்கள். அக்காலத்திலோ அதுவே உயர்ந்த பண்பாட்டுக்கு அறிகுறியாகக் கருதப்பட்டது.

இது ஒருபக்கம் இருக்க தென்னாட்டிலுள்ள மக்கள் மற்ற எல்லாத் துறைகளிலும் பழைய ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் கைவிடவில்லை. கண்ணன் கூறிய நான்கு சாதிகள் நானூறு சாதிகளாகப் பெருகிவிட்டாலும் குல தர்மங்களை அனுஷ்டித்து வந்தார்கள். ஜாதிகளுக்குள் எரிச்சல் துவேஷம் கிடையாது. தீண்டாமை என்ற ஒரு தீங்குமட்டும் மிகையாக இருந்தது. வீடுகளில் காலையில் எழுந்து ஸந்தியாவந்தனம் செய்தோ கடவுளை வேறு முறையாக வழிப்பட்டோ மக்கள் தினசரி வாழ்க்கை வேலைகளைத் தொடங்கினார்கள். தர்ப்பணம் சிராத்தம் முதலிய சடங்குகள் குறைவில்லாமல் நடந்துவந்தன. வைதிகர்களுக்கு சமூகத்தில் நல்ல மரியாதை இருந்தது. வீடுகளில் இறைவன் வழிபாடு நன்கு நடைபெற்று வந்தது.

திருமண விஷயங்களில் பழையவழிகளையே நம்முடையமக்கள் கடைப்பிடித்தார்கள். இளம் வயதில் மணம். தந்தை தாய் சொல்லுக்கு இணங்கிய மணம். ஆனால் இளம்தம்பதிகள் மனதில் உள்ள அன்பை நன்கு வெளியிட்டு வாழும் வாழ்க்கைகிடையாது. இது ஒரு குறைதான். ஆனால் மணஞ்செய்து வந்த மணமகள் ஏற்கனவே வீட்டிலுள்ளவர்களிடத்தில் அன்பு ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் அவர்களிடத்தில் இணக்கம் இருந்தது. நகைகள் சேலைகளிடத்தில் இயற்கையாக மோகம் இருந்தாலும் அவைகளுக்காக மிதமிஞ்சி செலவு செய்யமாட்டார்கள். மணமகனுக்கு இப்பொழுது நடைமுறையில் இருப்பதுபோல் ஏராளமான வரதக்ஷிணை கிடையாது; வரதக்ஷிணை என்றதே அப்பொழுதுதான் புது அவதாரம்; மணங்களும் இப்பொழுது ஏற்பட்டுள்ள ஆடம்பர முறைகள் அன்றி நடைபெற்றன.

அக்காலத்தில் விருந்தோம்பல் நல்லது என்று கருதினார்கள்.

"இருந்தோம்பியில் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்றும்

**அகமனமர்ந்து செய்யாளுறையு முகனமர்ந்து
நல்விருந்தோம்பு வானில்**

என்றும்

**உடைமையுளின்மை விருந்தோம்பலோம்பா
மடமை மடவார்களுண்டு.**

என்றும் திருவள்ளுவர் கூறவில்லையா? ஆனல் அப்பொழுதே ஹோட்டல்கள் (சாப்பாடு விடுதிகள்) தொடக்கமாய்விட்டது. ஆனலும் அன்னவிக்ரயம் சரியல்ல என்ற எண்ணமும் இருந்தது

அக்காலத்தில் வீடுகளில் சிலவிசேஷங்கள் உண்டு. சமையல் செய்யும் அறையும் சாப்பிடும் கூடமும் விரிவாக இருக்கும். வீட்டு கட்டடங்கள் ஆடம்பரமாக இருக்காது. வீட்டுக்கு வந்தவர்களை மயக்கும் ஆடம்பர அறைகள் (Drawing Room)கிடையாது. வழிப் போக்கர்கள் தங்க வாசலில் திண்ணைகள் கொரடுகள் உண்டு.

அக்காலத்தில் போக்கு வரத்து சாதனங்கள் குறைவுதான். ரயில் வந்திருந்தாலும் மாட்டு வண்டி குதிரை வண்டிகள்தான ஊருக்குள் உண்டு.

இன்று அந்தப் பழைய உலகம் அனேகமாக மறைந்துவிட்டது. ஆனல் இக்காலத்தில் எல்லாம் பிற்போக்கு படுமோசம் என்று நான் கூறவில்லை. அப்படியும் இப்படியுமாக இருப்பதாக என் கொள்கை... தாய்மொழியில் இப்பொழுது மிகுந்த அன்பும் ஆர்வமும் இருக்கின்றது. ஆனல் ஆங்கில மோகம் குறையவே இல்லை. பள்ளிக்கூட மாணவ மாணவிகள் பள்ளிக்கூடத்தில் தமிழ்ப் படிப்பு; வெளியில் ஆங்கிலப் பேச்சு. காலேஜ் குமாரிகளோ ஆங்கிலமயம். ஆடவர்களுக்கு புஷ்கோட் முகக்ஷவரம் சிகரெட்டில் அபார மோகம். சுதந்திரத்திற்குப் பிறகு ஆங்கிலமயத் தோற்றம் விஷம்போல் ஏறிக்கொண்டே போகின்றது!

பழைய ஆசாரங்களில் எல்லாம் இக்காலத்தில் மிகுந்த மாறுபாடு... தீண்டாமை மகாத்மா காந்தியடிகள் பெரு முயற்சியால் ஒழிந்தது நல்லதே. ஆனல் ஹரிஜனங்களுடைய மனங்களில்மற்றவர்களிடத்தில் நன்றியோ அன்போ ஆதரவோ ஏற்பட்டதாக இல்லை. சாதிகளுக்குள் அன்பு குறைந்துவிட்டது. அவைகளுக்குள் துவேஷத்தை வளர்ப்பதற்காகவே சிலர்கள் கங்கணங்கட்டிக் கொண்டு இருக்கின்றார்கள்.

வீடுகளில் குலதர்மமான ஆசாரங்கள் சடங்குகள் கடவுள் வழிபாடுகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகின்றது. உபநயனம் நடக்கவேண்டிய காலம் மீறி முற்காலத்தில் மணம் நடந்த வயதில் இப்பொழுது உபநயனம். சந்தியாவந்தனம் செய்வது இக்கால யுவர்களுக்கு உகந்த முறையாக இல்லை. தர்ப்பணம் சிராத்தம்கூட விச்வாசக்குறைவாகவே தான் பங்கின முறையில் நடைபெறுகின்றன. தேவபூஜை குன்றிக் கொண்டே போகின்றது. வைதிகர்கள் சமூக மரியாதையை இழந்ததுடன் சுய மரியாதையும் இழந்து கொண்டு வருகிறார்கள். அவர்களும் அவர்களுடைய சந்ததிகளும் வைதிகத் தொழிலையே வெறுக்கிறார்கள்.

குடும்பக்கலை (Fine Art) மிகவும் சிறந்த கலை; அதன் தற்கால நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது. இளம்வயதில் மணம் என்ற வழக்கம் அடியோடு மறைந்து விட்டது. யுவர்கள் வேலையான பிறகுதான் மணம் என்ற கொள்கையில் இருக்கிறார்கள். வேலையில்லாதத் திண்டாட்டமோ முன்னிருந்ததை விடப் பத்துமடங்கு அதிகம். ஆகையால் பெண்களும் மணத்தை விரும்பாமல் காலேஜ் படிப்பிலேயே ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களும் வேலைகளுக்காக ஆண்மக்களுடன் போட்டியிடுகின்றார்கள். மணஞ்செய்து கொள்வதானால் வரதக்ஷிணைக் கொடுமை தாங்கமுடியாது; மணஞ்செய்து கொண்டாலும் கணவனை மட்டும் விரும்புகிறார்கள்; அவனுடைய தாய்தந்தை அக்காள் தங்கை அண்ணன் தம்பிகளை வெறுக்கிறார்கள்; நகைகள் சேலைகள் விஷயமாக ஆடம்பரச் சிலவுகள் அதிகம். விருந்தோம்பல் மறைந்து போய்க் கொண்டிருக்கின்றது. ஓட்டல்களில் தேநீர் விருந்துகள் சாப்பாடு விருந்துகள் முன்னேறி வருகின்றன. ஆனால் கணவன் மனைவி பிரேமை வாழ்க்கை வெளிப்படையான அன்புடன் இருப்பது அழகாகவும் சிறப்பாகவும் இருக்கின்றது.

வீடுகளைக் கட்டும் முறையே மாறிவிட்டது. அடுக்களையும் சாப்பாட்டறையும் சின்னஞ்சிறு அறைகளாகிவிட்டன. வந்தவர்களை வரவேற்குமிடம் விரிவாகவும் ஆடம்பரமாக இருக்கின்றது. வாயிலில் எல்லாம் இரும்புக் கம்பிகளால் சிறைபோலவே தோற்றம். திண்ணைகள் கொரடுகள் மறைந்து விட்டன.

எது எப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும் கிராமபோன் ரேடியோ, டெலிபோன், டிராம், பஸ், லாரி, ஆகாயவிமானம் முதலியவை இருப்பதால் நம்முடைய தற்கால மேன்மைக்குக் குறைவே இல்லை.

வெளிநாட்டு அன்பர்களுக்கு
முக்கிய அறிவிப்பு

இந்தியாவுக்குவெளியேயுள்ள சந்தாநேயர்களிடமிருந்து புதுவருடச் சந்தாவும் 30-வது ஆண்டுமலர் நிர்மல-நீரோடை, சாந்தியின் சிகரம், குலதனம் முதலிய புத்தகங்களின் விலையும் B. P. O. அல்லது Bank Draft அல்லது M. O. மூலம் சென்ற டிஸம்பர் முதல் பணம் வந்ததற்கு மோகினி இதழ் அனுப்பும் பர்மிட் 11-2-53 தான் கிடைத்தது; இதர நாவல்கள் அனுப்பும் பர்மிட் 12-3-53 தான் கிடைத்தது. பர்மிட் கிடைத்த மறுதினமே புத்தகங்களை அனுப்பினோம்: இவ்விதம் எதிர்பாராத தாமதமேற்பட்டதற்கு மன்னிக்கவும்; இனிமேல் தாமதமின்றி பிரதி மாதமும் முதல் வாரத்திலேயே மோகினி தபாலில் அனுப்பமுடியும். பணமனுப்பும் நேயர்கள் ரிஜிஸ்தர் கவரில் கரென்ஸி நோட்டை வைத்து அனுப்பக்கூடாது; அது தற்போது சட்ட விரோதம். — ஆசிரியர்.

ஸ்ரீராம நவமியில்

சில சிந்தனைகளும், ஒரு தீர்ப்பும்

✻

'கம்பனுக்கும் வால்மீகிக்கும் இடையே உள்ள வேற்றுமையைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பீரா?' என்று என்னை ஒருவர் ஒரு சமயம் கேட்டதுண்டு. அதற்கு நான், 'வால்மீகம் உத்தம புருஷன் கதை; கம்பராமாயணம் புருஷோத்தமன் கதை' என்று விடை கூறினேன்.

வால்மீகியும் கம்பனும்

வால்மீகி மாமுனிவர் நாரத மகரிஷியை நோக்கி முக்கியமான குணங்களைச் சொல்லி, 'இந்த அழகிய குணங்கள் அமைந்த ஒரு மனிதன் இவ்வுலகில் இப்போது இருக்கிறானா?' என்று கேட்க, அதற்கு விடையாக நாரதர் ஸ்ரீராமன் பெயரைச் சொல்லி ராம சரித்திரத்தையும் சுருக்கமாகச் சொல்லுகிறார்: இது வால்மீகி ராமாயணத்தின் தொடக்கம்.

இத்தகைய வால்மீகி ராமாயணத்தைக் கம்பன் 'காசில் கொற்றத்து இராமன் கதை' எனக்கொண்டாடுகிறான். கம்பனுள்ளத்திலே இக்கதை ஊறி, 'இராமாவதாரப்பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை'யாகப் பெருகி வருகிறது.

ஸ்ரீகாஞ்சி மகாவித்வான் அண்ணங்கராசாரியர் தமது 'அபூர்வ ராமாயண'த்தின் முன்னுரையில் வால்மீகியின் தொடக்க அமைப்பை நன்கு ஆராய்ந்து விமர்சனம் செய்திருக்கிறார். வால்மீகி குறிப்பிட்ட குணங்களைப் பதினாறாக எண்ணிக்காட்டி ஸ்ரீராமசந்திரனின் இந்தப் பதினாறு கலைகளுக்குள் வால்மீகியின் கதை முழுவதும் அடங்கியுள்ளதென்று மெய்ப்பிக்கிறது 'அபூர்வ ராமாயணம்'.

கம்பனும் ராமசரித்திரத்தை இப்படி ஒருவேளை நினைத்துப் பார்த்ததுண்டோ என்று பொருள் கொள்ளுமாறு அமைந்திருக்கிறது,

கற்றைவெண் ணிலவு நீக்கிக் கருணையாம் அமிழ்தம் காலும்
முற்றுறு கலையிற் றூய முழுமதி முகத்தி னானை

என்ற யுத்தகாண்டச் செய்யுட்பகுதி.

ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் பூர்ணசந்திர பிம்பம் போன்ற திருமுகம் எல்லாக் கலைகளும் ஒருங்கமைய ஆக்கப் பெற்றதுபோல் காண்கிறதாம் முதல்முதல் பார்க்கும் விபீஷணன் கண்களுக்கு. இந்தக் கலைகளையெல்லாம் ராமபிரானது திருக்கல்யாண குணங்களாக அனுபவித்தால் இவையெல்லாம் சேர்ந்து கருணையாகிய அமுத வெண்ணிலவு பொழிந்து அத்திருமுகத்திற்கு ஆச்சரிய வசீகர சக்தி தந்தன என்று கருதலாம்.

பதினாறு கல்யாண குணங்களிலும், குணம் என்று சிறப்பித்துப் பேசுதற்குரிய சீல குணத்தை முதலாவது குணமாக ஸ்ரீ அண்ணங்கராசாரியர் குறிப்பிடுவது பொருந்துவது. தன் மேன்மை பாராமல் தாழ்ந்தவர்களோடும் கலந்து கொள்வதைச் சீலகுணம் என்று குறிப்பிடுவதும் பொருத்தமானதே.

எம்பெருமானுடைய சீலம்தான் அவதாரத்திற்கே காரணம் என்றுகூறி அந்த வடசொல்லின் பொருளாகிய 'இறங்குதல்' என்பதற்கு மேலுலகத்திலிருந்து இக் கீழுலகத்திற்கு வந்ததைப் பொருளாகக் கூருமல் இறைவன் தன் மேன்மைக் கோலத்தை விட்டுத் தாழ்ந்த நிலைமைகளை ஏற்றுக்கொண்டு குகன் முதலான வர்களுடனும் கலந்து கொண்டதைப் பொருளாகக் காட்டுகிருர், ஸ்ரீ அண்ணங்கராசாரியர். துஷ்டர்களுக்கும் கட்புலனுகி அருளுகிருன் என்று கூரேசன் உருகுவதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இத்தகைய அவதார ரகசியத்தைக் கம்பன் நன்குணர்ந்து தான் தனது ராமாயணத்தையே 'இராமாவதாரம்' என்று அழைத்திருக்கவேண்டும். ஆம், கம்பன் தன் ராமாயணத்திற்குச் சூட்டிய பெயர் 'இராமாவதாரம்' தான். பிற்காலத் தமிழ்மக்களே நன்றி மறிவுடன் 'அது வால்மீகி ராமாயணம் என்ருல், இது கம்பராமாயணம்' என்று தீர்மானித்து இக்கவிஞனுடைய பெயரையும் சேர்த்துக் 'கம்பராமாயணம்' என்று காவியப் பெயராக்கிவிட்டார்கள்.

வால்மீகியின் உத்தமபுருஷனைப் புருஷோத்தமனுகச் சித்திரித்துத்தான் கம்பன் 'இராமாவதாரம்' பாடியிருக்கிருன். வால்மீகத்திலே இந்த அவதார ரகசியம் வெளிப்படையாக இல்லையென்பது ஆராய்ச்சி அறிஞர்களின் அபிப்பிராயம்.

வால்மீகி ஸாக்ஷாத்கரித்த உத்தமபுருஷன், காளிதாஸன் முதலான மகாகவிகளின் வருணனைகளிலும், ரஸிகர்களின் ரஸ அனுபவங்களிலும், ஆழ்வார்களின் பக்தி அனுபவங்களிலும், வளர்ந்து வளர்ந்து புருஷோத்தமனுகி அந்தக் கோலத்திலும் சீலத்திலும் காட்சி தருகின்ருன் கம்பசித்திரத்திலே.

கம்பனது 'இராமாவதாரம்' சரணுகதி சாஸ்திரமாகவும் திகழ்கின்றது; சகோதரதர்ம சாஸ்திரமாகவும் விளங்குகின்றது.

மேல் ஒரு பொருளும் இல்லாமெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலக்(கு) உற்ற தம்மா!

என்று மரணமடையும்போது வாலி கூறுவதைக் கேளுங்கள். கட்புலனுகாத பகவான் துஷ்டர்களுடைய கட்புலனுக்கும இலக்காகிக் கருணை செய்யப் பிறந்தான் என்று கூரேசன் முதலான ஸ்ரீ வைஷ்ணவப் பெரியோர்கள் ஈடுபடுகின்ற அவதார தத்துவத்தையும் வாலி வாயிலாக வெளியிடுகிருன் கம்பன்.

மூன்றுபடிகள்

வால்மீகியின் உத்தமபுருஷன் லட்சியபுருஷனுகிப் புருஷோத்தமனுகிருன்என்ற மூன்று படிகளைச் சாதாரண ஆராச்சி அறிஞர்கள் காண்பதுண்டு, ராமாயண ஆராய்ச்சி செய்யும்போது. வால்மீகி ராமாயணம் ஸாராம்சத்தில் கல்யாணகுணங்கள் ஒருங்கமைந்த ஓர் உத்தம மனிதனுடைய கதை என்பது தற்கால ஆராய்ச்சி அறிஞர்களின் அபிப்பிராயமும்தான். வால்மீகியின் உத்தமபுருஷனை இவர்கள் லட்சியபுருஷனுகக் காண்கிருர்கள், பவபூதி முதலான கவிகளின் வாக்கிலே.

'மால் உகந்த ஆசிரியர்'களான ஆழ்வார் ஆசாரியர்கள் புருஷோத்தமனுகிய அவதார மூர்த்தியைக காண்கிருர்கள் ராமா

யணத்திலே. 'தெளியாத மறை நிலங்கள்' தெளியப்பெறும் திவ்ய பிரபந்தங்கள் ராமனைக் கல்யாணகுணக்கடலான புருஷோத்தமனாகவே அனுபவிக்கின்றன.

ஸ்ரீராமானுஜர் 'இராமாயணம் என்னும் பக்திவெள்ளம் குடிகொண்ட கோயில்' என்று போற்றப்பெறுகிறாரல்லவா? ராமானுஜருக்குப் பின்னும் நம்பிள்ளைக்கு முன்னும் தோன்றித் திகழ்ந்த கம்பன், ராமாயணம் என்ற பக்திவெள்ளத்தை ஒரு பாற்கடல் வெள்ளமாகவே காண்கிறான்.

ஓசை பெற்(று) உயர் பாற்கடல் உற்(று) ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன் மற்றுஇக்
காசில் கொற்றத்(து) இராமன் கதையரோ!

ஆழ்வார் ஆசாரியர்கள் வாயிலாகப் பெருகிவந்த ராமாயணம் என்ற பக்திவெள்ளத்தைப் பாற்கடல்வெள்ளமாக மனக்கண்முன் கண்ட கம்பன்,

அலைகடல் நடுவண்ஓர் அனந்தன் மீமிசை
மலையென விழிதுயில் வளரும் மாமுகில்,
'கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பன்'என்று
உலைவுறும் அமரருக்(கு) உரைத்த வாய்மையை

என்றெல்லாம் தெளிவாக அவதாரம் பாடியிருப்பது பொருத்தமானதே.

வால்மீகி ராமாயணம் காட்டிலே பிறந்தது; நாட்டிலே வளர்ந்தது. குருகுல பிரம்மசாரிகளுக்கு, 'குணவான் யார்? வீரியவான் யார்? தருமம் அறிந்தவன் யார்? நன்றியறிவுள்ளவன் யார்? சத்தியமே உரைப்பவன் யார்? திடமான விரதமுள்ளவன் யார்?...' என்பதுபோன்ற வினாக்களுக்கெல்லாம் ஒரே விடையாக உதவியது உத்தமபுருஷ சரித்திரமாகிய ராமாயணம்.

காட்டிலுள்ள ஆசிரமத்திலிருந்து குருகுல மாணாக்கர்கள் நாட்டிலுள்ள அரண்மனைகளுக்கு இக்கதையைக் கொண்டுபோயிருக்கவேண்டும். ஆசிரமத்தின் இயற்கைச் சித்திரம் பெரியபெரிய அரண்மனைச் சுவர்களில் தீட்டப்பெற்றது. ராமன் லட்சிய அரசனாகிறான், லட்சிய புருஷனாகிறான். இந்த இரண்டாவது நிலையைக் கம்பன்,

மறைதிறம் பாத வாய்மை மன்னர்க்கு முன்னம்சொல்லும்
துறை திறம் பாமல் காக்கத் தோன்றினான்

எனச் சுட்டிக் காட்டுகிறான்.

ராமாயண வளர்ச்சியின் மூன்றாவது நிலைதான் புருஷோத்தம நிலை அல்லது அவதாரநிலை என்பர் ஆராய்ச்சிக்காரர். காட்டிலுள்ள ஆசிரமங்களிலிருந்து அரண்மனைகளுக்கு வந்த ராமாயணம், மகாஜனங்கள் வாழும் குடிசைகளின் உடைமையானபோது, உத்தம—லட்சியபுருஷனான ராமன் புருஷோத்தமனாகிவிட்டான் என்பர். ஆசிரமத்தின் இயற்கைச்சித்திரம் அரண்மனைச் சுவர்களில் புதிய பெரிய வண்ணமும் தோற்றமும் பெற்றபின். குடிசை மக்களின் உள்ளத்திலே குடிபுகுந்ததும், இப்பொதுமக்கள் தங்கள்

உள்ளத்திலே எழுதிப் பார்த்தார்கள் இச்சித்திரத்தை; வானவராவ எழுதி மகிழ்ந்தார்கள்.

ஆசிரமத்தின் உத்தமன், அரண்மனையில் லட்சியம், மகாஜன உள்ளத்திலே புருஷோத்தமனின் அவதாரமாகிவிட்டான் என்பது ஆராய்ச்சி-மதம். இம் 'மத'த்தையும் கம்பன் வெளியிடுவது போலத்தோன்றுகிறது இன்றைய ஆராய்ச்சியாளரும் பிரமிக்குமாறு.

இக்கொள்கை சுக்கிரீவன் வாயிலாக வெளியிடப்படுகிறது. முதல் முதல் ராமனைத் தரிசிக்கிறான், சரணமடைகிறான். சுக்கிரீவன் கண்ட காட்சி மூன்று பாடல்களில் வருணிக்கப்படுகிறது.

முதலாவது பாட்டிலே உத்தமபுருஷனைக் காண்கிறான் ராமனைச் சுக்கிரீவன்:

கண்டனன் என்ப மன்னோ கதிரவன்-சிறுவன், காமர்க்
குண்டலம் துறந்த கோல வதனமும் குளிர்க்கும் கண்ணும்,
புண்டரீ கங்கள் பூத்துப் புயல்தழீ இப்பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம்செய்த மரகதக் கிரிஅன் னானை.

குணசௌந்தரியமே உருக்கொண்டது போன்ற ரூபசௌந்தரியத்தைக் காண்கிறான் சுக்கிரீவன்.

குண்டலம் துறந்த கோல வதனமும்

என்று ராமனது தியாக சௌந்தரியம் முதன்முதல் சுக்கிரீவனை வசீகரிப்பதாய்க் காட்டுகிறான் கவிஞன். வால்மீகியின் திருக்குணங்கள் ஒருங்கமைந்த உத்தம மனிதனைத்தான் இப்போது சுக்கிரீவன் ராமனைக் காண்கிறான்.

வைத்த கண் வாங்க முடியவில்லை. அப்படியே நோக்கி நிற்கின்றான் சுக்கிரீவன்:

நோக்கினான் நெடிதுநின்றான்,'கொடிவரும்கமலத்து அண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம் குவிக்(து) இருபடிவ மாகி
மேக்குயர் தடக்தோள் பெற்று வீரராய் விளைந்த!' என்பான்.

இது சுக்கிரீவன் காட்சியில் இரண்டாவது நிலை. உலகத்திற்கே லட்சிய வீரராகக் காண்கிறான் ராம லட்சுமணரை.

இனி மூன்றாவது நிலை, சுக்கிரீவன் உள்ளத்திற்குள்ளே நிகழ்வதுதான் இக் காட்சி:

தேறினான் அமரர்க்கெல்லாம் தேவராம் தேவ ரன்றே
மாறிஇப் பிறப்பில் வந்தார் மானுடராகி மன்னோ!

இந்தக் கடைசிநிலையில் புருஷோத்தமனுடைய அவதாரமாகவே ராமனைப் பார்க்கிறான் சுக்கிரீவன். உத்தமபுருஷநிலை, லட்சிய புருஷநிலை, புருஷோத்தம நிலை என்னும் மூன்று படிகளையும் இன்றைய பகுத்தறிவாளர்களும் வியக்குமாறு கம்பன் வெளியிடுகிறான் அல்லவா சுக்கிரீவன் வாயிலாக?

ஆனால் கம்பன் பகுத்தறிவாளன்தானா, பக்தன் இல்லையா? மகாபக்தன்தான். ஆகவே தான் உத்தம மனிதநிலையைக் 'கண்டனன்' என்றும், லட்சிய நிலையை 'நோக்கினான்' என்றும் அவதார நிலையைத் 'தேறினான்' அதாவது தெளிந்தான் என்றும் கவிஞன் அதிஜாக்கிரதையாகக் கூறியுள்ளான். மானுடச் சட்டையை

மட்டும் கண்டது ஸ்தூலமாய்க் கண்டதுதான். நோக்குதல் ஆழ்ந்த அன்புப் பார்வை. தெளிந்த பார்வையில் தேவதேவன் மானுடச் சட்டைகிறிக் காட்சியளிப்பதுபோலத் தோன்றுகிறது.

* * * *

இப்படியே சிந்தனைகள் அலையலையாக வருகின்றன இந்த ஸ்ரீ ராம நவமி நன்னாளிலே. எங்கேயாவது நிறுத்தியாகவேணுமே, இங்கேயே நிறுத்திவிடுகிறேன்.

இந்தச் சிந்தனைகள் நிற்கட்டும்; உம்முடைய அந்த ஒரு தீர்ப்பு என்ன?' என்று கேட்கிறீர்களோ? நன்றாய்க் கேளுங்கள். பகுத்தறிவுக்கும் பக்திக்கும் விரோதமில்லை என்பதுதான் இப்போது என் தீர்ப்பு.

ஸ்ரீராம ஜெயம்

H. R. ரங்கநாயகி அம்மாள்

நம் பெரியோர்கள் நாம் சன்மார்க்கத்தில் பழகுவதற்காக அனேக நல்ல வழிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாம் கடவுளை மறந்துவிடாமலிருக்க அவருக்குப் பலவித நாமங்களைச் சூட்டி அதற்குச் சரியாக ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு உத்ஸவத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் இப்பொழுது நடப்பது ஸ்ரீராம நவமி உத்ஸவம். இந்த உத்ஸவத்தை நாம் நமது சங்கத்தின் மூலமாக ஐந்து வருஷமாக வெகு சிறப்பாகக் கொண்டாடிவருகிறோம். வீண்பொழுது போக்காமல் ராமபக்தியில் ஈடுபட உதவி செய்ததற்கு இந்த மகாத்மாஜி ஸேவா சங்கத்திற்கும் அதை ஸ்தாபித்த ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாளுக்கும் நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

வித்துவான்கள் தங்கள் பொழுதை பகவத் விஷயங்களிலேயே கழிக்கிறார்கள் என்பதைக் காட்ட

"ப்ராதர் த்யூத ப்ரஸங்கேன மத்யா:ன்னே ஸ்த்ரீ ப்ரஸங்கத:
ராத்ரௌ சோர ப்ரஸங்கேன காலோ கச்சதி தீமதாம்"

என்று ஒரு ஸ்லோகம் இருக்கிறது. இதன் பொருள் வித்துவான்கள் காலையில் சூதாட்டப் புராணமான மகா பாரதத்தையும், மத்யானத்தில் ஸ்த்ரீ புராணமான ஸ்ரீராமாயணத்தையும், ராத்திரியில் சோர புராணமான ஸ்ரீபாகவதத்தையும் படித்து அநுபவிக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது.

நாம் எப்படிப் பொழுதைக் கழிக்கிறோமென்று பார்ப்போம்! காலையில் எழுந்து காபியானவுடன் நாம் வாசிக்கும் த்யூத புராணம் News Paper அதில் Sports காலத்தில் எந்த ஊரில் குதிரைப்பந்தயங்கள் நடக்கின்றது, எந்தெந்த குதிரைகள் ஜெயித்து பரிசு பெற்றது என்பதைப் பற்றியும் கிரிக்கட் மாட்சுகள் முதலிய பல விஷயங்களைப் பற்றியும், நன்றாகப் படித்து ஆனந்திக்கிறோம்.

இப்பொழுதெல்லாம் ஸ்திரீகளும் இவ்விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்வதினால் மற்ற ஸ்திரீகளுக்கும் இதிலுள்ள உத்ஸாகம் மற்றொன்றிலுமில்லை. பிறகு பகல் வேளைகளில் ஸ்திரீ புராணமாகிற சினிமா நட்சத்திரங்களைப்பற்றி அரிய புஸ்தகங்களை(!) படித்துப் பேசிப் பேசி மகிழ்கிறோம். அவர்களுடைய அலங்கோலமான படங்களையும் பார்த்துப் பார்த்து மகிழ்கிறோம். என்னே மதியீனம்! மோட்சார்த்தமான புஸ்தகங்களை விட்டு காமியார்த்தமான புஸ்தகங்கள் என்றுகூட சொல்ல வெட்கப்படும்படியானவைகளைப் படித்து ரசிக்கிறோம். இதில் நாம் காணும் பலன் என்னவோ தெரியவில்லை. இது விஷயங்களையும் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அதை ஓரளவுக்குள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இதுநிற்க ராத்ரி வேளைகளில் சோர ப்ரசங்கமான மானிடத் திருட்டுப் புராணங்களைப்பற்றி ஓயாது வாய் கிழியும்படிப் பேசுகிறோம். அதற்குப் பதில் நவநீத சோரனைப்பற்றிப் பேசினால் இகத்திற்கும் பரத்திற்கும் நன்மை யுண்டாகுமே. இந்த மூன்று புஸ்தகங்களையும் பகவத்கீதையையும் பாராயணம் பண்ணுகிறவர்களைவிட பாக்யசாலிகள் இந்தஉலகத்தில் இல்லை.

'சீதாயா:சரிதம் மஹத்' என்னும் ஜகன் மாதாவான சீதா தேவியின் சரித்திரத்தைக்காட்டிலுமா இச் சினிமா தேவிகளின் சரித்திரம் ஜனங்களுக்குத் தித்திக்கிறது? நம்மையெல்லாம் ரக்ஷிக்கவல்லவோ அவர் இப்பூலோகத்தில் சீதா பிராட்டியாக மிதிலையில் அவதரித்து ஸ்ரீராமசந்திரனை மணந்து பதிவிரதா தருமத்தை ஒவ்வொரு அம்சத்திலும் எடுத்துக்காட்டி, சிறைபுகுந்து நினைக்கமுடியாத கஷ்டங்களிலெல்லாம் தன் பொறுமையால்தான் பூதேவீ என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளார். அவருடைய மஹாத்மியத்தையும் அவதார ரகசியங்களையும் ஆதிசேஷனாலும்வர்ணிக்கமுடியாது.

அப்பேர்ப்பட்ட சீதாராம சரித்திரமான ஸ்ரீராமாயணத்தை இந்த ஸ்ரீராம நவமி ஒன்பது தினங்களிலும் பாராயணம் பண்ணினோமானால் சகல சாம்ராஜ்யங்களையும் அடையலாம். ஒருவராகச் செய்வதைவிட பலர் கூடி பஜனைகளும் காலக்ஷேபங்களும் ஹரிகதைகளுமாகச் செய்தால் அதிகமான பக்தி ஏற்படுமென்று பெரியோர்கள் தோன்றி அவ்விதங்களையும் நடத்தி வருகிறார்கள். பலவித ராமாயண புஸ்தகங்களையும்

எழுதியிருக்கிறார்கள். நமக்கு வெகு சுலபமாகப் படிக்கும்படி பெரிய ராமாயணத்திலிருந்து ஸாரங்களைப் பிழிந்து நமக்குப் போதிக்க சிறிய புஸ்தகங்களாகவும் அளித்திருக்கிறார்கள்.

ஆதிசேஷனாலும் வர்ணிப்பதற்குக் கஷ்டமான ஸ்ரீராம பிரானது பெருமையை அல்பமான நாம் சொல்வது சரியன்று. வால்மீகி, கம்பர் முதலான மகான்களால் நாம் கடைத்தேறும் பொருட்டு ஸ்ரீராமாயணம் பிறந்தது. பகவானைத் தரிசிப்பது போல் பிரதி தினமும் அதிலுள்ள சில ஸ்லோகங்களைப் படித்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. எங்கள் வீட்டில் சிறுகுழந்தைகள் பேசத் தொடங்கினதிலிருந்தே ஸ்ரீராமாயணத்தை நாலே வரிகளில் பெரியவர்கள் சொல்லிக்கொடுப்பது வழக்கம். குழந்தைகள் தங்கள் மழலைச் சொல்லில்,

"பூர்வம்ராம தபோவனுபிகமனம் ஹத்வாம்ருகம் காஞ்சனம்
வைதேஹிஹரணம் ஜடாயுமரணம் ஸுக்ரீவஸம்பாஷணம்
வாலிநிக்ரஹணம் ஸமுத்ரதரணம் லங்காபுரீதாஹனம்
பஸ்சாத் ராவண கும்பகர்ண மதனம் ஏதத்தி ராமாயணம்"

என்று சொல்லும்போது நாரதரின் வீணையையும் லவகுசரின் கானத்தையும் கேட்ட அவ்வளவு சந்தோஷம் நமக்கு உண்டாகிறது- குழந்தைகளும் சொல்லும் படியான அவ்வளவு எளிய முறையிலும் ராமாயணத்தைப்போல் பாரதத்திற்கும், பாகவதத்திற்கும் சிறிய சிறிய ஸ்லோகங்கள் இருக்கின்றன. அவைகளையாவது நாம் தினம் தப்பாமல் ஸ்மரிக்கலாம். மகாத்மாஜி ராம நாமத்தை முக்கியமாகக் கொண்டு தாமும் பஜித்து நம்மையும் அப்படிச்செய்யும்படி உபதேசித்திருக்கிறார். அவர் பெயரைக் கொண்ட நம் சங்கமும் அந்தக் கட்டளைப்படி நடந்து வருகிறது என்பது நமக்கு ஒரு பெருமையே. இவ்வளவு சிறந்த ராம நாமத்தை நாம் இடைவிடாமல் பஜித்தால் நாடு க்ஷேமமடைந்து மக்கள் குறைவின்றி வாழ்வார்கள். இதற்கு வழி காட்டும் நம்சங்கம் இன்னும்பல சிறந்த சேவைகளைச் செய்து கொண்டு நீடூழி வாழ வேண்டுமென்று சீதாராமனை பிரார்த்திக்கிறேன்.

யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய
காந்தி கீர்த்தனம்
350 பக்கங்கள். ரூ. 3—8—0.
உயரிய கிளேஸ் புதிப்பு.
இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
இது பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே

முப்பது வருடங்களில்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி.)

கடந்த முப்பது வருடங்களில் மக்களது வாழ்க்கைத்தரம் மனநிலை இவைகள் எவ்வளவு தூரம் பண்பட்டிருக்கிறது? (1914) முதல் மகாயுத்தத்திற்குப் பின் நாடு ஒருவாறு அமைதியடைந்திருந்தது; அடிமைப்பட்டிருந்தது என்றாலும் மக்கள் பஞ்சமும் நோயுமின்றி ஓரளவு நல்ல முறையிலே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் வளர்ச்சியேற்படுவதற்கு மாறாக இந்தச் சூழ்நிலையிலே நாகரிகம், பண்பாடு, தெய்வபக்தி இவைகளெல்லாம் குறைந்தன. சுகவாழ்வு வாழும் பொழுது மனிதன் தெய்வத்தை மறந்து விடுகிறான் என்பது பொதுவிதி. அதற்கிணங்க மக்கள் உல்லாசவாழ்க்கையிலே விருப்பங் கொண்டனர். அதன் பயனாக தெய்வநம்பிக்கை குறையத்தொடங்கிற்று. ஆங்கில மோகம் அதிகரித்தது. மேல் நாட்டாரிடமுள்ள சிறந்த அம்சங்களையெல்லாம் விட்டுவிட்டு வேண்டாத பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளத் தொடங்கினர். அப்படி வாழ்வதுதான் நாகரிக வாழ்வு, நாகரிகத்தின் முதிர்ச்சி என்றும் தோன்றியது மக்களுக்கு. காற்று வீசும்பக்கம் மலர்கள் உதிர்வதுபோல மக்களது மனநிலை ஆங்கில நாகரிகச்சுழலிலேயே சென்றுகொண்டிருந்தது. இந்த நிலையிலேதான் காந்தியடிகள் தம்முடைய பிரசாரத்தைத் தொடங்கினார். மக்களது நெஞ்சிலே தேசபக்தியும் தெய்வபக்தியும் மெல்லமெல்ல இடம்பெறத் தொடங்கின. காந்தீயம் என்ற அந்தக் காற்று வீசும் திசை நோக்கி மக்களது மனமும் திரும்பியது.

பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு என்ற உண்மையும் நாமிருக்கும் நாடு நமது என்ற உண்மையும் தோன்றவே வாழ்க்கை அழகாக விரியத் தொடங்கிற்று. மகாத்மாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தியாகம், சேவை, சுதந்திரம் என்பவைகளைப் பற்றியெல்லாம் மக்கள் சிந்திக்கத் தொடங்கினர். ஆனால் இதையடுத்துவந்த உலக மகாயுத்தம் மக்களது மனப்பான்மையையே மாற்றிவிட்டது. உலக மகாயுத்தம் நடைபெற்ற பொழுதைவிட அது நின்ற பிறகே அதனால் ஏற்பட்ட கொடுமைகளின் விளைவுகள் அதிகரித்தன. நாடு முழுவதும் பஞ்சமும், கொள்ளையும் கலகமும் தாண்டவமாடின. எங்கு பார்த்தாலும் கஷ்டம். இதனால் மக்களது மனநிலை பெரிதும் மாறத்தொடங்கியது. இதன் பயனாக நாடு சுதந்திரம் பெற்றும் குழப்பங்கள் ஓயவில்லை. இதன் பயனாக மறைந்துகொண்டிருந்த தெய்வ நம்பிக்கை மீண்டும் தளிர்க்கத் தொடங்கிற்று. அதன் பயனை இன்று பார்க்கிறோம்.

எங்குப் பார்த்தாலும் சமய உணர்ச்சியை ஊட்டவல்ல சொற்பொழிவுகளும் பிரசாரங்களும் நடைபெறுகின்றன. பொன்னைப் புடம் போடப் போட மாற்று உயர்வதுபோல மக்கள் கஷ்டங்களினால் மனத்தூய்மை பெற்று வருகிறார்கள். நெஞ்சகங்கள் பக்தியினால் மலர்கின்றன. ஆகவே கடந்த முப்பது வருஷங்களிலே மக்களது மனநிலையிலே மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறதா என்ற கேள்வி எழுந்தால், "ஆம்! மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன அவை மிகமிக நல்ல மாறுதல்கள், நாஸ

திகம் பேசிய எல்லோரும் தெய்வம் உண்டு என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. மனிதன் மனிதனாக வாழ விரும்பினால் தெய்வத்தை நம்பித்தான் வாழவேணும் என்ற உண்மையையும் கண்டு கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பகுதி.

ஆனால் குடும்ப நிர்வாகம் வாழ்க்கையின் தரம் இவைகளைப் பற்றி அன்று முப்பது வருஷங்களுக்கு முன் இருந்த பிரசினைகள் வேறுவகை; இன்று இருக்கும் பிரசினைகள் வேறுவகை. அன்று குடும்பத் தலைவன் சிற்சில சிறு பிரசினைகளைமட்டும் தீர்த்துக்கொள்வதனால் சௌக்கியமாக வாழமுடிந்தது. நாலைந்து குழந்தைகளுள்ள ஒரு குடும்பத் தலைவன் ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவு சம்பாதிப்பான். பெண்களுக்கு விவாகம் ஆண்களுக்குத் தொழில் செய்வதற்கேற்ற கல்வி—இவைகளைச் செய்து முடித்து விட்டால் அவன் கடமைகள் ஓரளவு முடிந்துவிடும். பிறகு மன அமைதி பெற வழி இருந்தது. ஏதோ சிலர் நீங்கலாக மற்ற எல்லோரும் நம்முடைய கடமை இவ்வளவுதான்: நம்முடைய எல்லையும் இவ்வளவுதான் என்ற த்ருப்தியோடு வாழ முடிந்தது.

ஆனால் இன்று இந்த வாழ்க்கைத்தரம் மனநிலை என்ற இரண்டு சொற்களும் மிகமிகப் பெரிய வடிவமெடுத்து பிரம்மாண்டமான பிரசினைகளாக நிற்கின்றன. பெண்கள் முன்னேற்றம் பெண்கள் சீர்திருத்தம் சுதந்திரம் என்றெல்லாம் நினைத்தோம் பேசினோம் செய்தோம்; இன்று அதன் விளைவுகள் எவ்வளவு தூரம் நம்மை பாதிக்கின்றன என்பதைப்பற்றி நாம் அப்பொழுது சிந்தித்துப் பார்த்திருக்க முடியாது. நாடு ஒரே நிலையிலிருந்து இந்தச் சீர்திருத்தங்கள் கைகூடி இருந்தால் இதன் பலன் இன்னும் உயர்வாகவும் வேறு விதமாகவும் இருந்திருக்கலாம். இன்று வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமென்று விரும்புகிறோம். இதே சமயத்திலே நாட்டிலே பஞ்சமும் பற்றாக் குறையும் ஒருபுறம். நாமே ஆட்சி முறையை வகுக்கத் தொடங்கிய சமயம் இப்படிப் பல காரணங்கள் ஒன்றுகூடி வாழ்க்கையைக் குழப்பி மனநிலையைச் சிதறச் செய்திருக்கிறது.

பால்ய விவாகங்களினால் தீமையதிகம் என்று நினைத்தோம்: ஒரு சட்டமும் வகுக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட சில வருஷங்களுக்கு அது மிகவும் நன்மையெனவே தோன்றிற்று. இப்பொழுதும் தோன்றுகிறது. ஆனால் நடை முறையிலே காலத்தின் போக்கிற்கேற்ப அதிலிருந்து எத்தனை வகையான சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன?

இப்படியேதான் சொத்துரிமைச் சட்டம், பலதார விவாகத் தடை மசோதா, விவாகரத்து முதலியவைகளும் சட்டமாகி விட்டன.

இதனால் மிகுந்த நன்மைகள் ஏற்படக் கூடுமென்று அறிவாளிகள் கருதினர். சில சமயங்களில் ஒரு நோய்க்குச் சிகிச்சை செய்யும் பொருட்டு ஒரு மருந்தைக் கொடுத்தால் அதன் பிரதிபலிப்பு என்று (Reaction) சில சங்கடங்கள் நேர்வதுண்டு. சில மருந்துகள் பிரதிபலிப்பையும் மீறி ஒன்று கிடக்க ஒன்றாகவும் பரிணமிப்பதும் உண்டு. அதுபோல இந்த முப்பது வருஷங்களில் படிப்படியாய்

மாறிவந்திருக்கும் நம் சூழ் நிலை மன நிலை வாழ்க்கைத்தரம் இவைகளெல்லாம் நமக்கு நன்மைகளை மட்டுமே தந்திருக்கிறதா? அப்படியானல் அது எந்த அளவில் நன்மை என்பதைப்பற்றி நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். பெண்கள் கல்வியிலே சிறந்து விளங்கவேணும் என்பது நியாயமான ஆசைதான். அறிவு வளம் பெற்ருல்தான் நாடு வளம் பெறும். உயர்ந்த ஆடம்பரமான வாழ்வு வாழவேணுமென்று நினைப்பதும் நியாயமென்றே பலருக்கும் தோன்றும். நல்வாழ்வு என்பது வேறு. உயர்ந்தது என்று பலரும் நினைக்கிற ஆடம்பர வாழ்வு வேறு. இதிலே எது முக்கியம்? எது தேவை.?

பெண்கல்வி உயர்ந்ததனல் சரிநிகர்ச் சமமாக வேலையிலே போட்டியிடுவது மலிந்து விட்டது. ஆண்களும் பெண்கள் சம்பாதிப்பதும் சௌகரியம் தானே என்று நினைக்கிருர்கள். இதனல் வாழ்க்கையிலே ஏராளமான சிக்கல்கள், மனத்தாங்கல்கள், மனக்கசப்பு, கடமையை செவ்வலாகச் செய்ய இயலாமை இவைகளெல்லாம் வந்துசேருகின்றன. இது மட்டுமல்ல. ஆண்கள் பொறுப்பைக் குறைத்துக் கொண்டு இலேசாக வாழவேணு மென்று நினைக்கத் தொடங்குகிருர்கள். பெண்களும் இப்படியே நினைக்கிருர்கள். இதன் விளைவு எப்படி முடியும் என்பது யாருக்குத் தெரியும்?

இது சீர்திருத்தம் என்ற மருந்தினல் விளைந்த சிக்கல். ஆனல் சீர்திருத்த மனப்பான்மை கெடுதியா? முப்பது வருஷங்களுக்கு முன்பிருந்த அதே மனநிலையில் இன்று நாம் இருக்க முடியுமா? வாழமுடியுமா? இந்த விஞ்ஞான வளர்ச்சி கடந்த முப்பது வருடங்களுக்குள் எத்தனையோ அற்புதங்களைக் கொடுத்திருக்கிறது. அவைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு சுகமாக வாழ்வதை விடுத்து நூல் நூற்று துணி உடுத்து, கைக் குத்தல் அரிசியைச் சாப்பிட்டுக்கொண்டும் இயற்கை வைத்தியம் செய்து கொண்டும் வாழவேணுமென்று நினைக்கிறீர்களா? அது ஏற்குமா? அது யாருக்குப் பிடிக்கும்? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

நியாயந்தான். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல, என்பது நமக்குத் தெரியும். ஆனல் பழமையிலிருந்து எங்கெந்த சிறந்த அம்சங்களை நிறுத்திக் கொள்ளவேணும், புதுமையிலிருந்து நூற்றுக்கு நூறு அப்படியேஏற்றுக்கொள்ளவேணுமா என்பதைத்தான் நாம் சிந்திக்க வேணும். நமக்குக் கிடைத்திருக்கும் வசதிகளையெல்லாம் அறிவு வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, கலைவளர்ச்சி இவைகளை யெல்லாம் நல்லமுறையிலே நாமும் பயன்படுத்திக் கொள்ளவேணும் பிறரையும் பயனடையச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்குமுன் பழமையையும் புதுமையையும் அவை ஒன்றுடன் ஒன்று கலந்து பிரிக்கமுடியாமலிருக்கும் காரணங்களையும் ஆராய்ந்து தேவையான முறையில் பிரித்தெடுத்து உபயோகிக்கவேண்டும்.

பயிர் விளைந்தால் கூடவே களைகளும் முளைக்கும். ஒரு நல்ல விவசாயி அவ்வப்பொழுது களைகளை எடுத்து, பயிரைக்காப்பாற்றுவான். அவனுக்கு எது பயிர் எது களை என்பது தெரியும். அதே போல இந்தச் சூழ் நிலையிலே எது பயிர் எது களை என்பதைப்

புரிந்துகொண்டு நாம் மேலே செல்லவேண்டும். அப்படி புரிந்து கொள்ளுவதற்குத் துணை செய்பவை பத்திரிகைகள்தான்.

கடந்த முப்பது வருடங்களில் அடித்தளமாய் நின்ற பத்திரிகைகள் சிலவற்றை முன் கட்டுரையில் குறித்தோம். இந்த வருடங்களிலே எழுத்தாளர்கள் எவ்வாறு வளர்ந்திருக்கிறார்கள், எழுத்தாளர் உலகம் எவ்வாறு வளம் பெற்றிருக்கிறது என்பதும் ஆராய்ச்சிக்குரிய விஷயமே. எழுத்தாளர் உலகம் முன்னேறியிருக்கிறது. தமிழ் வளர்ந்து வளம்பெற்று வந்திருக்கிறது. பாரதிக்கு முன் இருந்த பத்திரிகைகளும் அவருக்குப் பின் இருந்த பத்திரிகைகளுமே இதற்குச் சிறந்த உதாரணம். பாரதிக்குப்பின் தான் மறுமலர்ச்சியுகம் என்றே சொல்லலாம். பாரதியாரின் எளிய நடையைப் பின்பற்றி பல எழுத்தாளர்கள் உறை நடை எழுதத்தொடங்கினார்கள். அப்பொழுது தோன்றிய பல பத்திரிகைகளையும் அவைகளின் வளர்ச்சியையும் பார்க்கும்பொழுது நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. இதையடுத்து ஏராளமான எழுத்தாளர்களைத் தோற்றுவித்த பெருமை அறிஞர் வ. ரா., மணிக்கொடி ஸ்ரீனிவாசன் இவ்விருவரையுமே சேரும். ஏறக்குறைய நமது ஜகன்மோகினி, ஆனந்தவிகடன், பிரசண்டவிகடன் கலைமகள் இவைகளெல்லாம் இதற்குச் சற்று முன் பின்னாகத் தோன்றியவைகளே. ஆனந்தவிகடன், புதூர் வைத்தியநாதன் என்ற ஒரு லிங்காயத்தாரால் தொடங்கப் பெற்று ஏறக்குறைய ஆனந்தபோதினியைப்போல மாதம் ஒருமுறை விகட சக்கிர விநாயகன் அடிதொழுது வந்து கொண்டிருந்தது. அதிலே பெரும்பாலும் மிகமிக சாமான்யமான விகடங்களும் லிங்காயத்தார்கொள்கைகளும் நரி லிங்கங்கட்டிக்கொண்ட கதை போன்ற கதைகளும் வெளிவந்து கொண்டிருந்தது. அவரிடமிருந்து ஸ்ரீ வாஸன் அவர்களது கைக்கு மாறியபிறகே மாதம்இருமுறையாகமாறி புது எழிலும் பொலிவும் பெறத் தொடங்கிற்று. இதன் வளர்ச்சியை இன்றும் தமிழ் பேசும் மக்கள் உள்ள இடங்களிலெல்லாம் பார்க்கின்றோம். கலைமகள் இதற்குச் சில வருடங்கள் கழித்தே தோன்றியது. அதன் வளர்ச்சியையும் இன்று காண்கிறோம்.

ஆனால் இவைகளுள் மணிக்கொடி செய்த பணி வேறு வகையானது- குறுகிய கால அளவிலே நல்ல சிறந்த சிந்தனையாளர்களையும் எழுத்தாளர்களையும் தோற்றுவித்ததோடு நில்லாமல் எழுத்தாளர் உலகிலே மறுமலர்ச்சி என்ற ஒரு சொல்லுக்கே முன்மாதிரியாகவும் விளங்கிற்று. தனியே சிறுகதை யிலக்கியம் என்ற ஒரு கிளையை வளர்ப்பதே தனது நோக்கமாகக் கொண்டு பல புதிய எழுத்தாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தியது. இதன்மூலம் அறிமுகமான கு. ப. ராஜகோபாலன், புதுமைப் பித்தன், முதலியவர்கள் எழுத்தாளர் உலகிலே தனிச் சிறப்புப் பெற்றவர்கள். இன்று சினிமா உலகிலிருந்து பணிசெய்யும் ஸ்ரீ B. S. ராமையா, இதன்மூலமும் ஆனந்தவிகடன் சிறுகதைப் போட்டி மூலமும் அறிமுகமானவரே. மேலும் ந. பிச்சமூர்த்தி, தேனீ ஆசிரியர் மற்றும் பலரும் மணிக்கொடி மூலம் அறிமுகமானவர்களே.

இப்படி மணிக்கொடி தனது வன்மையினால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மணிக்கொடி யுகம் என்ற பெயரையே சூடிக்கொண்டது. இதற்கு உருதுணையாக அமைந்தது சுதந்திரச் சங்கு என்ற அரசியல் பத்திரிகையும், அதன் ஆசிரியரான தேசபக்தர் சங்கு சுப்ரமண்யமும் என்றாலும் மிகையாகாது. ஏறக்குறைய இதே சமயத்தில் பிரசண்டவிகடன், அமிர்த குணபோதினி என்பவையும் பணியாற்றின. இவைகளுள் பிரசண்டவிகடன் மட்டுமே எஞ்சி நிற்கின்றது.

இவைகளுக்குச் சற்றுமுன் திருச்செங்கோடு காந்தியாசிரமத்திலிருந்து தலைவர் ராஜாஜி அவர்களால் மதுவிலக்குப் பிரசாரம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு விமோசனம் என்ற பத்திரிகை வெளிவந்தது. அதில் வெளிவந்த அற்புதமான கதைகள் மனதை உருக்கவல்லவை. ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்களும் அப்பொழுது அதில் அங்கேயிருந்து பணி செய்திருக்கிறார்.

இப்பொழுது விமோசனத்தில் வெளியான பல கதைகள் ராஜாஜிக் குட்டிக்கதைகள் என்ற பெயரால் வெளிவந்திருக்கின்றன. நோக்கம் நிறைவேறியதும் நாட்டிற்கு விமோசனம் பிறந்ததும் "விமோசனம்" மறைந்தது.

இம்மாதிரியே கிராம புனருத்தாரணம் ஒன்றையே தமது நோக்கமாகக் கொண்டு தமிழ் நாட்டின் தலைசிறந்த ஆசிரியர்களுள் ஒருவரான K. S. வெங்கட்ரமணி அவர்கள் 'பாரத மணி' யைப் பதிப்பித்தார். ஆனால், அதனால் ஆசிரியர் பெற்ற பயன் வறுமை ஒன்றுதான். ஏறக்குறைய பரலி சு. நெல்லையப்பரின் லோகோபகாரியும் இதைப் போன்றதே. நோக்கம் சிறந்ததாயிருந்தும் ஆதரிப்பாரின்றி லோகோபகாரி காற்றில் மறைந்தார். ஒரு புறம் வளர்ச்சியும், மற்றொரு புறம் ஆதரவின்மையும் இருந்தும் பொருளாதார நெருக்கடி என்னும் பெருங்கடலிலே எதிர் நீச்சுப் போட்டு வெற்றி பெறலாம் என்ற துணிவுடன் தோன்றிய பத்திரிகைகள் பல. இவைகளுள் ஹனுமான், சிவாஜி, சக்தி, தியாகி முதலியவைகளை முக்கியமாகக் குறிப்பிடலாம்

சுதேசமித்திரன் இந்தியா முதலிய தினப் பதிப்புகளும் வாரப் பதிப்புகளை வெளியிடத் தொடங்கின. ஆசிரியர் கல்கியவர்களை தமிழ் உலகிற்குத் தந்த பெருமை நவசக்திப் பத்திரிகைக்கும் அதன் ஒப்பற்ற தலைவரும், தமிழ்ப் பெருங்கொண்டலுமான திரு வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்களையே சேரும். தமது நவசக்திமூலம் அவர் நாட்டுக்கும் மொழிக்குமே ஒருநவசக்தி யளித்துவிட்டார் தமது சீடர் மூலமாக. இதை யடுத்துத்தான் கல்கி, காவேரி, முதலியவை தோன்றின.

இதன் பின்னர் பல சிறந்த எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் தம் தமக்கென்றே தனிப்பத்திரிகைகள் தொடங்கினார்கள். இவைகளுள் முக்கியமானவை தேனீ, திருமகள், இந்திரா சூறாவளி, விருந்து, பாரிஜாதம், சந்திரோதயம், கலாமோகினி, கதை மலர், அஜந்தா, வெள்ளிமணி, நாடோடி, அசோகா, சிந்தனை, காண்டீபம், மாலதி, மங்கை, புதுமைப் பெண் முதலிய பல பத்திரிகைகள் தோன்றி வெகு சீக்கிரத்திலேயே மறைந்தன.

என்றாலும் இவைகளின் மறைவினால் பத்திரிகைகள் முன்னேற வில்லையென்றோ தமிழ் வளர்ச்சி குன்றி விட்டதென்றோ சொல்லி விடமுடியாது. இவைகளின் மறைவுக்குக் காரணம் பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல; நிர்வாகஸ்தர்களின் பொறுப்புக் குறைவும் ஒத்துழையாமையுமே ஓரளவு காரணங்களாகும்.

இதற்குப்பின் தோன்றியவைதான் கலைக்கதிர், மஞ்சரி, அமுதசுரபி, குமுதம், தினமணிக்கதிர் முதலிய பத்திரிகைகள். தோன்றி பணிசெய்து வருகின்றன. சில ஜீவநதிகள் எப்பொழுதும் ஒரே ரீதியாகச் சென்று கொண்டிருக்கும், அதில் பெரு வெள்ளமும் வந்து விடாது, வற்றி உலர்ந்து வரண்டும் போய் விடாது. அது போன்றது கடந்த 4, 5, வருடங்களாக வெளி வந்து கொண்டிருக்கும் சிறுகதை என்னும் மாத வெளியீடு. இன்று நாட்டிலே தோன்றியுள்ள பல இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய பெருமை இதைச் சேரும். இதிலே முதன் முதலாக எழுதத் தொடங்கிய பலர் இன்று சிறந்த எழுத்தாளர் என்று பெயரும் பெற்று விட்டார்கள்.

இப்படி கடந்த முப்பது வருடங்களாக பத்திரிகைகளின் வளர்ச்சி வெற்றிக்கும் தோல்விக்கும் இடையிலே நடைபெறும் போராட்டங்களுக்கு நடுவிலே தலை தூக்கி மிகமிகஉன்னதநிலை நோக்கிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் தழைத் தோங்கி வளர்ந்திருக்கிறது. பத்திரிகைகள் ஏராளமான பிரதிகள் விற்பனையாகின்றன. ரசிகர்களான வாசகர்கள் கூட்டம் மேன் மேலும் பெருகியிருக்கிறது. என்றாலும் எழுத்தாளர்களுள் புகழும் பொருளும் பெற்று நல்ல நிலையில் இருப்பவர்கள் வெகு சிலரே; அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

(தொடரும்)



தமிழ்ப்
பத்திரிகையுலகிலேயே
ஒரு புதுமையாக
ஒரே ஆசிரியையின்
பேனாவிலிருந்து
ஸப்த ஸ்வரம் போன்று
ஏழு அம்சங்களுடன்
(31 உருப்படிகளுடன்)
தமிழ்ப் பூங்கொத்தாக
உருவாகியுள்ளது.

நிர்மல நீரோடை ரூ. 3.

2. தத்துவம் என்றால் என்ன?

(சென்ற இதழ்த் தொடர்ச்சி.)

இன்பமாய் வாழ்க்கை நடந்துகொண்டிருக்கிறபொழுது சட்டென நம் மனத்தகத்தே ஒரு பெரும் ஐயம் எழுந்துவிடுகின்றது. ஏதோ உலக அலுவல்களில் உழன்று கொண்டிருக்கிறோமே, அத்தகைய நாம் யார்? நம் மனைவி யார்? நம்பிள்ளைகள் யார்? நம்முன் விரிந்து நிற்கிற பிரபஞ்சத்திற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? இத்தகைய கேள்விகள் கிளம்பிவிடுகின்றன. பிரபஞ்சம் சித், அசித்துமாயிருக்கிறதென்றால், 'சித்' என்றால் என்ன? அசித் என்றால் என்ன? அசித்திற்கு வயமாய் சித் இருக்கிறதா? அல்லது அசித்திற்குப் புறம்பாய்'சித்' இருக்குமா? பிரபஞ்சத்தில் ஓர் ஒழுங்கு இருக்கிறதா? இதற்கு ஏதேனும் அர்த்தமுண்டா? இதை நடத்தி வைக்கிற சக்தி ஏதேனும் உண்டா? என்று மனிதன் திரும்பத் திரும்பக் கேட்கின்றான்.

வாழ்க்கையின் விமர்சனந்தான் கவி என்று மாத்தியு ஆர்னல்ட் சொன்னார். கவிக்குத் தந்த லக்ஷணத்தை நாம் தத்துவத்திற்குத் தரலாம். வாழ்க்கையின் விமர்சனந்தான் தத்துவமென்று கூறலாம்.

நாம் எழுப்பிய கேள்விகளுக்கு விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகளில் விடைகள் நமக்குக் கிடைக்கா. சமயிகள் இவைகளுக்குத் தக்கவிடைகள் தருவதாகச் சொல்லுகின்றனர். ஆனால் சமயிகளுக்குள்ளே எழும் வாதப்போர்களைப் பார்த்தோமானால், அவர்கள் தருகின்ற விடைகளிலும் ஏமாற்றந்தான் வரும். நமக்குச் சரியான விடைகள் கிடைக்கின்றனவோ கிடைக்கவில்லையோ அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. தத்துவத்தின் அலுவல் அவைகளை ஆராய்ச்சி செய்வதே என்று ரசல் தம் மேனாட்டுத் தத்துவ சரித்திர நூலில் கூறுகின்றார்.

விஞ்ஞானம் உலகத்தை உள்ளபடி ஆராயத் தொடங்குகின்றது. அதன் இயல்பை விருப்பு வெறுப்பின்றி அது அறிய முயல்கின்றது. சாதாரண மனிதனுக்கும் விஞ்ஞானிக்கும் இதுதான் வித்தியாசம். சாதாரண மனிதன் பொருள்களைத் தூலமாக அறிகின்றான்; ஒரு விஞ்ஞானி அதைத் துருவிப் பார்க்கின்றான். வெறும் மனிதனுக்கு விஷயங்கள் தொடர்பு அற்றவைபோலத் தோன்றுகின்றன. விஞ்ஞானி பொருள்களிடையே மறைந்து கிடக்கும் ஒழுங்கைப் பார்க்கிறான். மேலிருந்து பாத்திரம் கீழே விழுகின்றது; மரத்திலிருந்து இலை உதிர்கின்றது; பழம் விழுகின்றது. மேலே சென்ற கல் கீழ் நோக்குகின்றது. இப்படி விஷயங்களை அடுக்கிக்கொண்டே போனால் மனத்திற்குக் குழப்பம் வரும். இத்தனை விஷயங்களையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை; இவைகளின் அடிப்படையான தத்துவம் மனத்திற்கு வருமானால் பூமிக்குப் பண்டங்களை ஈர்க்கும் சக்தியிருக்கிறது என்ற உண்மை நியூடன் மனத்தில் உதயமாயிற்று. அதுமுதற்கொண்டு நம்முடைய மனத்திலிருந்து ஒரு பளு நீங்கிப் போய்விட்டது. ஆகாயத்தில் சுழலும் அகிலகோடி கோளங்களும் ஏன் தம் நிலையில் நிற்கின்றன என்றதின் காரணத்தையும் நாம் கண்டுவிட்டோம். விஷயங்கள் நம்மை ஆளவில்லை; நாம்தாம் விஷ

யங்களை ஆள்கின்றோம். அவைகள் மீது நாம் வெற்றிகொண்டு விட்டோம்! இப்படி ஒவ்வொரு துறையிலும் விஞ்ஞானி வெற்றி கொள்ளுகிறான்; சாதாரண மனிதன் பிரபஞ்சத்தின் முன் திகைத்து நிற்கின்றான்.

ஆனால் பிரபஞ்சத்தின் காரணத்தை விஞ்ஞானம் அறிய முன்வரவில்லை. ஆனால் தத்துவம் அதை ஆராயத்தொடங்கு கின்றது. ஒரு நிகழ்ச்சி ஏற்படுமானால் அதற்குக் காரணம் என்ன? அது என்ன? அது ஏன் வருவானேன்? அதை எப்படி அறி கின்றோம் என்ற கேள்விகளைத் தத்துவம் தூண்டுகின்றது.

*அதன் உபாதான காரணமென்ன? நிமித்த காரணம் என்ன? பிரபஞ்ச சிருஷ்டியின் நோக்கமென்ன? அந்நோக்கத்தின் காரணத்தைச் சொல்லமுடியுமா?

உலகம் உதயமான முதற்கொண்டு இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு மனிதன் மண்டையை உடைத்துக் கொள்ளு கின்றான்; மூளை குழம்புகின்றது. என்றுமில்லாத இருட்டறையில் ஏதோ ஒன்று இருப்பதாக எண்ணித் தேடுகிற முயற்சியென்று தத்துவத்தை எண்ணி நகையாடுகிற மாந்தர்களும் உண்டு! உண்பதே போதும், உடுப்பதே போதும், ஏன் இந்த விசாரணை என்று மனிதரிடையே பேச்சு எழக் கேட்டிருக்கின்றோம். தத்துவம் இறை ஆராய்ச்சியுமன்று(Theology)விஞ்ஞான ஆராய்ச்சியுமன்று (Science) ஆனால் பரத்தை நாடுவதுதான் தத்துவம் என்று இறைவனிடத்தில் நம்பிக்கை வைப்போர்கள் சொல்லுவர்; இறைவனுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? இறைவனும் நானும் ஒன்றா? பேதமுண்டா? சித் அசித் ஈச்வரன் இவர்களுக்குள்ள சம்மந்தமென்ன? மோக்ஷமென்றால் என்ன? எப்படி அவனை அடையலாம்? பிரபஞ்சம் நித்தியமா? பொய்யா? இக்கேள்விகளை நம் வேதாந்திகள் எழுப்புகின்றனர்.

வேதத்தை ஒப்புக் கொண்டு பேசினால் இக்கேள்விகளுக்கு இடமுண்டு; அடிப்படையான தத்துவத்தையே நம்பாதவர்களிடத்தில் நாம் என்ன செய்யமுடியும்.?

இறைவனை நாடுவதே இயல்பாய்ப்போய்விட்டது நம்முடைய நாட்டுத் தத்துவத்தில். அதில் தனித்து நிற்க வில்லை என்று மேனாட்டார்கள் சொல்லுகிறதில் ஓரளவு உண்மை இல்லாமல் இல்லை. தத்துவத்தின் முடிவு அதுதான் என்று கண்டார்கள். ஆகவே அவர்கள் இறைநூலையும் தத்துவநூலையும் பிரிக்கவில்லை.

இறைநூல் (Theology) விஞ்ஞானம் (Science) தத்துவம் (Philosophy) இம்மூன்றையும் நாம் ஆராயாமலிருக்கமுடியாது. இறை நூல்ஆண்டவனின் நிலையைபும், ஆத்மாவுக்கும் அவனுக்குமுள்ள தொடர்பையும் பிரபஞ்சத்திற்கும் அவனுக்குமுள்ள சம்பந்தத்தையும் ஆராய்கின்றது. விஞ்ஞானம் :பிரபஞ்சத்தை மட்டுந் துருவி நோக்குகின்றது. ஒவ்வொருவிஞ்ஞானம் ஒவ்வொரு பகுதியைச்சிந்தித்துப் பார்க்கின்றது. ஆனால் தத்துவமோ எல்லாவற்றையும்

---

* உபாதானகாரணம்: Material Cause
நிமித்த காரணம்: Efficient cause
முடிவு; இச்சை: Final Cause
தர்க்கப் பிரமாணம்: Logical Cause

விஷயமாய் எடுத்துக்கொண்டு காரண காரியங்களைத் தேடுகின்றது. இறைநூல், விஞ்ஞானம், மற்றும் எல்லா ஞானங்களும் அதன் ஆட்சிக்கு உட்பட்டதாய் விளங்குகின்றன.

தத்துவ சரித்திரமென்பது இதுதான். பிரபஞ்சத்தின் உண்மையான நிலை என்ன? என்ற விஷயமாகப் பல ஊகங்கள் பல நூற்றுண்டுகளாய்ச் செய்துவரப்படுகின்றன. அநேக அறிஞர்கள் தோன்றுவார்கள். முன்சொன்னதைச் சிலர் ஆமோதிக்கலாம்; வேறு சிலர் மறுக்கலாம். அவரவர் அறிவுக்கேற்றவாறு ஊகங்களைச் செய்வார்கள். இவ்வூகங்களின் விருத்தாந்தந்தான் தத்துவ சரித்திரமாகும். இறைநூலுக்கும் விஞ்ஞானத்திற்கும் நடுவே தத்துவம் நிற்கின்றது என்று ரசல் மொழிகின்றார். மனிதன் சிந்திக்கத் தொடங்கிய அந்நாள் முதற் கொண்டே, அவனுடைய செயல்கள் அவன் கொண்ட தத்துவத்தை சார்ந்து நிற்கின்றதைப் பார்க்கின்றோம். அவன்கொண்ட தத்துவம் அவன் சூழ்நிலையிலிருந்து பிறக்கின்றது. தத்துவத்தால் சூழ்நிலை மாறுகின்றதா? அல்லது அவன் சூழ்நிலைதான் அவன் தத்துவத்திற்கு உருக்கொடுக்கின்றதா? இந்த அன்னியோன்னிய சம்பந்தத்தை மனிதன் மறக்கவே கூடாது.

இறை நூலிலிருந்து தனியாய்க் கலப்பற்றதாய்த் தத்துவம் பிரிந்து கிரேக்கநாட்டில் கி. மு. ஆறும் நூற்றுண்டில் தோன்றி விட்டது. கிறிஸ்துவமதம் ஓங்கி ரோமசாம்ராஜ்ஜியம் விழவே இறை ஆராய்ச்சிக் கடலில் தத்துவம் மூழ்கிவிட்டது; ஏன் மறைந்துவிட்டது என்று சொல்லலாம்.

கி. பி 11-ஆம் நூற்றுண்டிலிருந்து 14-ஆம் நூற்றுண்டுவரையில் கத்தோலியரின் மடத்தின் ஆட்சிவசம் தத்துவம் சிக்கிவிட்டது. 17-ஆம் நூற்றுண்டிலிருந்து இப்பொழுது நிகழ்கிற ஆண்டுவரையில் எல்லாம் விஞ்ஞானத்தின் ஆதிக்கியமாய்ப் போய்விட்டன. மதத்தின் ஆற்றல் குன்றிவிட்டது. பழைய நம்பிக்கைகள் கூட புதிய விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலைகளில் சோதிக்கப்படுகின்றன.

மதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டது போலத் தனித்த மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் போர் நிகழத் தொடங்கிவிட்டது. மனிதனுக்காகச் சமுதாயமா? சமுதாயத்திற்காக மனிதனா? என்ற சர்ச்சை மனித உள்ளத்தைக் கவர ஆரம்பித்தது. ஏசுநாதரே இக்கேள்வியை எழுப்பினர்: மனிதனுக்காகவா ஞாயிறு வழிபாடு? அல்லது ஞாயிறுவழிபாட்டிற்காக மனிதனா? கிரேக்கநாட்டில் சமுதாயசேவைக்காகவே மனிதன் தோன்றினன் என்ற நம்பிக்கை வேரூன்றி இருந்தது. அந்நிலையிலே அவனுடைய சுதந்திரம் தடைபடத்தான் படும். ஸ்பார்ட்டா (Sparta)வில் சமுதாயத்திற்காகவே மனிதன் வாழ்ந்தான். பிளேட்டோவின் 'குடிஅரசு' இதை வலியுறுத்துகின்றது. கிரேக்க சமுதாயம் அழியவே தனிமனிதன் சமுதாயத்தைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லாமற் போயிற்று. அவன் தன் ஆத்மாவுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள சம்பந்தத்தை ஆராயத் தொடங்கினன். இக்கொள்கையைக் கொண்டவர்கள் "ஸ்டாயிக்ஸ்" (Stoics). இந்த தத்துவத்தைக் கிறிஸ்துவர்கள் ஏற்றுக் கொண்டனர்,

கிறிஸ்துவ மதத்திற்கு வழி திறந்து வைத்தது இக்கொள்கை என்று சொன்னாலும் மிகையாகாது.

ரோம சாம்ராஜ்யத்தில் சமுதாயத்தின் ஆற்றல் மிகுதியாயிருந்தது உண்மையே. சைன்னியங்களாலும், சட்டதிட்டங்களாலும் பலவந்தத்தாலும் இது ஏற்பட்டது. ஒரு தத்துவத்தால் இது நிகழ்ந்ததன்று. சமுதாயத்தைக் காட்டிலும் ஆண்டவன் கைங்கரியம் பெரிதென்று சமுதாயத்தை எதிர்த்தனர் கிறிஸ்துவர்கள்.

சமுதாயத்தைக் காட்டிலும் தெய்வவழிபாடு பெரிதென்று கிரேக்கப்பெண் ஆண்டிகானி காட்டிவிட்டாள். சமுதாயம் சட்டம் விதித்தாலும் உடன்பிறந்தோனுக்கு ஈமக்கடனைச் செய்தாள் அவள். இதைச் சொபாகலிஸ் என்ற கிரேக்க நாடக ஆசிரியர் தம் அழிவில்லாத நாடகத்தில் சித்திரித்திருக்கிறார்.

சமய வழிபாடுதான் பெரிதென்று போகவே மதத்திற்கும் சமுதாயத்திற்கும் போராட்டம் ஏற்பட்டது. மத்திய காலத்தில் மடத்தின் ஆதிக்கியம் ஓங்கி நின்றது.

பிறகு மடத்தை எதிர்க்கத் தொடங்கினர். மடம் என்ன சொல்லுவதற்கு இருக்கிறது? அவரவரவர் மனந்தான் பிரமாணம் என்ற முடிவுக்கு வந்தனர். 16-ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு பெரும்புரட்சி ஏற்பட்டது. ரோமாபுரி மத ஆதிக்யத்தைச் சில நாடுகளில் வேரொடு மாய்த்துவிட்டனர். புறத்து ஆதிக்கியத்தை அங்கீகரிக்கமாட்டோம், மனச்சாட்சியே ஒரு பிரமாணமாகக் கொள்ளுவோம் என்ற ஆரவாரம் எங்கும் கேட்கத் தொடங்கிற்று.

நவீன தத்துவம் டேக்கார்ட்டோடு (Descartes) தொடங்கிற்று என்று சொல்லலாம். தத்துவத்தில் மனச்சாட்சியின் பிரமாணமும், அரசியலில் தனி மனிதனின் உரிமையும் சுதந்திரமும் கைகோத்து நின்றன. அவரவர் மனோதர்மம் கலையிலும், இலக்கியத்திலும், அரசியலிலும் பிரதிபலிக்க ஆரம்பித்தது. இப்பொழுது இலக்கியத்தில் மனோதர்மத்தின் எல்லைக்கு வந்துவிட்டனர். இலக்கியம் சமைப்பது சமுதாயத்திற்காக அன்று; கலைஞர் தம்தம் மனோதர்மத்தை வெளியிடுவதே நோக்கமாகக்கொண்டு விட்டனர். சமுதாயத்தைப் புறக்கணித்தனர்.

தனித்த மனிதனை அவன் மனம் போனபடி விடாமல் அடக்கக் கூடிய கிளர்ச்சிகளும் தோன்றின...ஜர்மனியில் ஹெகல் சமுதாயத்திற்காக மனிதன் இருக்கிறான். சமுதாயந்தான் தெய்வம்; அதை வழிபடுவதே அவன் நோக்கமாய் இருத்தல் வேண்டும் என்றுகூறினர். நீட்சி பலத்தைப்பற்றிப்பேசினார். இரும்பும் ரத்தமும் ஆயுதமும் கொலையுந்தான் சமுதாயத்திற்குத்தேவை என்று பிஸ்மார்க் மொழிந்தார். இந்தச் சூழ்நிலை ஒரு ஹிட்லர்குழந்தையை உண்டுபண்ணி விட்டது. இப்பொழுதுருஷியாவில் சமுதாயத்திற்காகத்தான் மனிதன் இருக்கிறான்; அவன் வாயைத்திறக்கக் கூடாது. இத்தாலியாவிலும் பாசிஸக்கொள்கை அத்தகையதாயிருந்தது.

இம்முறையில் ஐரோப்பிய சரித்திரம் செல்லுகின்றது. ஒரு சமயம் தனித்த மனிதன் உரிமையை நாகரிகம் வளர்த்தது

ஜ—4

1—4—55

கின்றது; வேறொரு சமயம் சமுதாயமே தெய்வமென்று அது பேசுகின்றது. அதற்கேற்றவாறு தத்துவமும் அமைகின்றது. தனித்த மனிதனுடைய சுதந்திரம் சிதையாமல் ஒரு சமுதாயம் அமையும்படி செய்வதே அறிஞர்களின் நோக்கமாயிருத்தல் வேண்டும்.

வெளிப்பிரமாணமா? அகப்பிரமாணமா என்ற சர்ச்சைகள் தத்துவத்தில் எழும். இவைகளை நடுநிலையிலிருந்து ஆராய்வது பழுத்த ஞானிகளின் கடமையாகும்.

பாலர் மோகினி

காற்றாடி.

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

ச்யாமும் உதயம் ஆனதும் அறியாது பூதேவின் மடியில் அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தான். அவன் அருகில் பலபேர் குசமசவென்று பேசும் சந்தடி கேட்டு, கண்ணை விழித்துப் பார்த்தான். அவனுடைய தாயார் உமா படுத்துக் கொண்டு இருந்தாள். அவளைச் சுற்றி அனேக பெண்கள் சூழ்ந்து கொண்டு மிகவும் துக்கத்துடன் அழுதுகொண்டு இருந்தார்கள். பால் மணம் மாறாத பச்சைக் குழந்தை ச்யாமு ஒன்றும் புரியாது விழித்தான். தன் தாயார் இன்னும் தூங்குவதாகவே நினைத்து அருகில் வந்து எழுப்பத் தொடங்கினான்.

உமாவை எடுத்துப்போகவந்த சமயம் ச்யாமுபெரிதாய்க் கத்தி உபத்ரவம் செய்யலானான். எவ்வளவு சிரமப்பட்டுப் பிடித்து வைத்துக் கொண்டாலும் பிடியில் அடங்காமல் பிணத்தின்மீது விழுந்து கத்தத்தொடங்கி விட்டான். ஐயோ! அம்மா தூங்கிக்கொண்டு இருக்கிறாளே, எங்கே எடுத்துப் போகிறீர்கள்? நான் விடமாட்டேன்! என்று கல்லும் கரையும் வண்ணம் அலறினான்.

ச்யாமுவை சமாதானம் செய்வது மிகவும் ச்ரம சாத்ய மாகப் போய்விட்டது. தினமும் ச்யாமு அழாமல் இருப்பதற்காக "அம்மா உங்க மாமா வீடு போயிருக்கிறாள்; வந்துவிடுவாள்" என்று சமாதானம் செய்து வந்தார்கள். ஆனால் அஸத்யமே சூழ்ந்து இருக்கும் இந்தகாலில் சத்யம் அதிகநாள் ஒளிந்து இருக்க முடியவில்லை. அக்கம் பக்கம் உள்ள சிறிய குழந்தைகள் "உங்க அம்மா இங்கு எல்லாம் இல்லை. இறந்து போய், பெருமாளிடம் போய்விட்டாள். இனி வரவே மாட்டாள்" என்று ஊர்ஜிதமாய்ச் சொல்லிவிட்டார்கள்.

தன் தாயை நினைத்து ஏங்கி அழுது அழுது கொஞ்சநாளில் தானாகவே அழுகை குறைய ஆரம்பித்தது. ஆனால் அந்த ஏக்கம்

ஹ்ருதயத்தைவிட்டு அகலவில்லை ப்ரம்மாண்டமானமழைபெய்த பிறகு 2, 3 தினங்களில் பூமியின்மேல் இருக்கும்ஈரம் உலர்ந்து விடுகின்றது. ஆனால் பூமியின் அடியில் மழையின் ஈரம் அனேகநாள் வரை இருந்துகொண்டே இருக்கும். அதைப் போல் ச்யாமுவின் அந்தரங்கஸ்தலத்தில் சோகம்நிரந்தரமாய் உட்கார்ந்துவிட்டது. துக்கத்தின் காரணமாய் ச்யாமு எப் பொழுதும் தனியாய் ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்து இருப்பான்.

அவ்வாறு ச்யாமு ஆகாயவெளியைப்பார்த்துக்கொண்டே இருக்கையில் ஒருநாள் ஆகாயத்தில் வெகுதூரத்தில் ஒரு காற் றாடி பறந்துகொண்டு இருந்ததைக் கண்டான். அவனை அறி யாமல் சந்தோஷத்தால் அவன் ஹ்ருதயம் பூரித்தது ஒரே ஓட்ட மாய் தகப்பனாரிடம் ஓடிவந்து, அப்பா எனக்கு ஒரு காத்தாடி வாங்கித்தா! இப்பவே வாங்கித்தா என்று கெஞ்சிக்கேட்டான்.

மனைவியின் பிரிவால் தாக்கபட்ட விஸ்வேஸ்வரன், சரி வாங்கித்தரேன் போ! என்று சொல்லிக் கொண்டே துக்கத் துடன் வெளியே போய்விட்டார். தனக்கு காத்தாடி வாங்கத் தான் அப்பா வெளியே போனதாக நினைத்த ச்யாமு எதிர் பார்த்து பார்த்து ஏமாற்றந்தான் அடைந்தான். காத்தாடி விடவேண்டும் என்ற ஆசையை அவனால் அடக்கவே முடிய வில்லை. தந்தையைத் திருப்பிக் கேட்க பயமாய் இருந்தது. அதே யோசனையில்மூளையைக் குழப்பிக்கொண்டு இருந்தான். சட்டென்று ஆணியில் மாட்டப்பட்டு இருந்த விஸ்வேஸ்வர னின் சொக்காய் கண்ணில் பட்டது. சுற்று முற்றும் பார்த்து விட்டு ஒருசின்ன நாற்காலியை எடுத்துப் போட்டுக் கொண்டு ஜோபியை தடவினான். முழு கால்ரூபாய் கையில் கிடைத்தது. ஓசை படாமல் காசை எடுத்துக்கொண்டு ஓட்டம்பிடித்தான்.

அவன் வீட்டு வேலைக்காரியின் மகன் போலா ச்யாமுவிடம் சமயோசிதமாய் நடக்கும் அன்பான நண்பன். போலாவை ரகஸ் யமாய் அழைத்துச் சென்று, இதோபார் இந்த பணத்தில் யாருக்கும் தெரியாது ரஹஸ்யமாய் நூலும், ஒரு காத்தாடி யும் வாங்கிவா! யாருக்கும் தெரியாது கொண்டு வரவேண்டும்! என்று உஷார் செய்து அனுப்பினான்.

ஒருநொடியில் ஓடிச்சென்று காத்தாடியும் நூலும் வாங்கி வந்தான். இருவரும் ஒரு இருட்டு அறைக்குச் சென்று கயிறு கட்டத் துடங்கினார்கள். மெதுவாய் ச்யாமு, போலா! உன் னிடம் ஒருரஹஸியம் சொல்லுகிறேன், ஆனால் நீ அதை யாரிடமும் சொல்லவே கூடாது. அப்படியானல் சொல்வேன் என்றான்.

போலா உற்சாகத்தோடு தலை ஆட்டிக் கொண்டே, சிச்சி நான் யாரிடமும் சொல்லவே மாட்டேன், சொல்லு! என்றான்.

ரஹஸியமாய் போலாவின் காதோடு, இந்தக் காத்தாடி எதற்குத் தெரியுமா வாங்கினேன்? இந்தக் காத்தாடியை

ஜோராய்ப் பறக்க விட்டால் ஆகாயத்தைப் போய்ச் சேரும். அங்கேதான் எங்க அம்மா உமா இருக்கிறாள் என்று பக்கத்து எதிர்வீட்டுப் பசங்கள் சொன்னார்கள் இந்தக் காத்தாடியை எங்க அம்மா பார்த்தால் உடனே இதைப் பிடித்துக் கொண்டு கீழே என்னிடம் வந்து விடுவாள். எனக்கு எழுதக்கூடச் சரியாய் தெரியாதே, தெரிந்தால் 'அம்மா' என்று எழுதிக்கூட அனுப்புவேன் என்று குறையுடன் சொன்னான்.

எப்பொழுதுமே யோசனைகள் சொல்வதில் பேரலா மகாகெட்டிக்காரன். ச்யாமு! உன்னுடைய யோசனை ரொம்ப சரியானது; ஆனால் ஒரு விஷயம்: இத்தக் கயிறு மிகவும் மெல்லியதாய் இருக்கிறது. இந்த கயிற்றைப் பிடித்துக்கொண்டு அம்மாவால் இறங்கிவரமுடியாது. ஒரு வேளை அறுந்து போய்விட்டால்? அதனால் கொஞ்சம் பருமனானகயிறு போடு, அம்மா பயமே இல்லாது வருவாள்.

இதைக் கேட்டது தான் தாமதம்! ச்யாமுவின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. சூரியனைக் கண்ட தாமரையைப்போல் அவன் முகம் மலர்ந்தது. ஒரு லக்ஷ ரூபாய் கொடுத்து இருந்தால்கூட அவ்வளவு சந்தோஷம் வராது.

ஆனால் அடுத்த நிமிஷமே முகம் கருத்து கருகிச் சோக பிம்பமாய்ப் போய்விட்டது. காரணம்? தடி நூல் வாங்க கையில் காசு இல்லையே! அவன் மனம் எண்ணாததும்எண்ணி விம்மியது. வீட்டில் இருப்பவர்கள் கொஞ்சமும் தயை இல்லாது அம்மாவைக் கொண்டு போய்விட்டார்களே..அப்பாவைக் காத்தாடி கேட்டும் வாங்கித் தாவில்லை; இந்தக் கயிற்றை வாங்க என்ன வழி செய்வது? என்ற யோசனையில் ராத்திரி தூக்கம்கூட வாராது தவித்தான்.

முன்பு போலவே ஓசைபடாது அப்பா ஜேபியில் இருந்து ஒரு ரூபாயை எடுத்தான். பேரலாவிடம் ஓடிப்போய், இந்தா! இந்த ரூபாயை எடுத்துக்கொண்டுபோய் இரண்டு கயிறுகளாய் வாங்கிவா, ஒரு கயிறு அவ்வளவு உயரம் போகப் போறாது, சீக்கிரம் வா, அதற்குள் நான் போய் பக்கத்தாத்து ஜவஹரிடம் ஒரு பேப்பரில் "அம்மா" என்று எழுதி வாங்கி வருகிறேன். பெயர் எழுதி இருந்தால் காத்தாடி சரியாய் அம்மாவிடம் போய்ச் சேர்ந்துவிடும்! என்று ஓடினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் இருவரும் பரபரப்புடன் பூரித்த மனத்தோடு இருட்டு அறையை அடைந்தார்கள். காரியம் துரிதமாய் நடந்துகொண்டு இருந்தது.

"பூஜை வேளையில் கரடி புகுந்தாற்போல்" என்று ஒரு வசனம் சொல்வார்கள். அதுபோல் ருத்ர மூர்த்தியாய் விஸ்வேஸ்வர் அந்த அறையை அடைந்தார். இருவரையும் இழுத்து மிரட்டியவாறே, என் ஜேபியிலிருந்து ஒரு ரூபாய் எடுத்தீர்களா? உண்மையைச் சொல்லுங்கள் என்றார்.

மிரண்டுபோன போலா ஒரு வார்த்தையிலேயே உண்மையை ஒத்துக்கொள்ளத் துணிந்து விட்டான்: ச்யாமு காத்தாடியும், கயிறும் வாங்க ஜேபியில் ஒரு ரூபாயை எடுத்தான் என்றான். இதைக் கேட்டது தான் தாமதம்! விஸ்வேஸ்வரின் ஆத்திரம் உச்சியை எட்டியது. படவா, திருடவா கற்றுக்கொண்டு ஜெயிலுக்குப் போகப்போகிறாயா? வா, வா உனக்குச் சரியானபாடம் கற்பிக்கிறேன் என்று சொல்லி, கண்ணுமண்ணு தெரியாது தாயற்ற குழந்தை என்றும் பாராது சரமாரியாய் அடித்து விட்டார். அதோடு விடாது காத்தாடியையும் கிழித்து எறிந்தார்.

போலாவின் மனம் பதறுகிறது. அவரைத் தடுக்கவும் தைரியம் இல்லை. மெதுவாய் சமாளித்துக்கொண்டு, அப்பா! நாங்கள் விளையாட வாங்கவில்லை. இந்தகாத்தாடியை ஆகாயத்துக்கு அனுப்பி அம்மாவை அழைத்துக்கொண்டு வரத்தான் செய்தோம்! என்றான். இதைக் கேட்ட விஸ்வேஸ்வரனுக்கு ஆகாசமும், பூமியும் சுற்றுவதுபோல் இருந்தது. தான்தான் மனைவியைப் பிரிந்து கஷ்டப்படுவதாய் எண்ணினாரே தவிர குழந்தையின் துக்கத்தை அறியவில்லை. ஓடிப்போய் கிழிந்த காத்தாடியை எடுத்துப் பார்த்தார். அதன்மேல் "அம்மா" என்று எழுதி ஒட்டி இருந்தது. இதைப் பார்த்த விஸ்வேஸ்வரனின் தலையில் எரிமலையே புரண்டதுபோல் அதிர்ச்சி உண்டாகியது. அடித்த கைகளே மகனை வாரி அணைத்தன.

(சியாராம் சரண் குப்தா எழுதிய
ஹிந்திக் கதையைத் தழுவியது.)

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்
B. A., L. T., M. L. C.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

1932

கோடை விடுமுறை

ஆனால் அதில் சேர்ந்து படிப்பதற்கு 10பேருக்குமேல் முஸ்லிம் பெண்களே இல்லாமையால், 2, 3 வருஷங்களுக்கு முஸ்லிம் அல்லாதாரையும் அந்த வகுப்பில் மாத்திரம் சேர்த்துக்கொள்வதற்கு கவர்மெண்டில் அனுமதித்திருந்தார்கள். ஸெயிண்ட் தோம் கான்வெண்டிலிருந்து ஒரு கன்னியாஸ்திரீயும் சில கிறிஸ்தவப்பெண்கள் S. S. L. C. முடித்தவர்களும் அந்த Secondary Training வகுப்பில் படித்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஹிந்துஸ்தானி பாஷை தெரியாது — அந்த வருஷம் ஹாஸ்டலில் கதிஜா பீ

என்னும் ஒரு பெண் கீழ்வகுப்பு ஒன்றில் படித்துக்கொண்டிருந்தாள். மலையாளம் மாப்பிள்ளைமார் என்னும் முஸ்லிம் வகுப்பைச் சேர்ந்தவள். அவள் ஏதோ குழந்தைத்தனமாகச் செய்த ஒரு சிறு குற்றத்துக்காக கோர்ட்டார் மூலமாக மிஸஸ் யாகுப் ஹாஸன் என்பவருடைய முயற்சியாலும் அனுதாபத்துடன் அவர் செய்த பண உதவியுடன் படித்து வந்தாள். வயது 15, 16 இருக்கும். அவளுக்கும் அதிகமாக ஹிந்துஸ்தானி பாஷை தெரியாது. ஆகவே ஸ்கூல் நேரத்துக்குப்பிறகு கான்வெண்டிலிருந்து வண்டி வரும் வரைக்கும் தோட்டத்தில் அங்குமிங்கும் இருந்து கொண்டு கிறிஸ்தவ மாணவிகள் இந்த கதீஜாபீயுடன் தமிழில் பேசிக்கொண்டிருப்பது வழக்கம்.

செப்டம்பர் 6ஆந் தேதி அதிகாலையில் ஸ்கூல் பியூன் ஒருவன் ஓடிவந்து "அம்மா, "கதீஜாபீ"யைக் காணோம். ஹாஸ்டலிலிருந்து யாரோ கொண்டுபோய் விட்டார்கள். தாரா பீ அம்மா செய்வதறியாமல் தவிக்கிறார்கள். உங்களை உடனே வரும்படி கேட்டுக்கொள்கிறார்கள்" என்று பதறிப்போய்ச் சொன்னான்.

நான் உடனே மிஸஸ் யாகுப் ஹாஸனுக்கு விஷயத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் அவன் மூலம் அனுப்பிவிட்டு ஸ்கூலுக்குப்போய், அங்குவந்த ஸ்ரீமதி யாகுப் ஹாஸனுடன் அப்போது இன்ஸ்பெக்டராயிருந்த மிஸஸ் மார்டினிடமும் போலீஸ் இலாகாவிலும் தகவல்தெரிவித்துவிட்டுத் திரும்பினோம். ஸ்ரீ யாகுப் ஹாஸன், ஸ்ரீ ரஹ்மத் உன்னிஸ்ஸா பேகம் இன்னும் இரண்டு மூன்று பெரியவர்கள், பாடசாலையில் பலபேர்களை விசாரணை செய்தனர். ஸ்கூல் முழுவதும் ஒரே பரவசம், பரபரப்பு, கதீஜாவை யாரோ கொண்டுபோய் விட்டார்களாமே, யாராயிருக்கலாம்? இதே பேச்சு. கடைசியில் அவர்கள் முடிவு கட்டியது கீழ்க்கண்டவிதம்—

கான்வெண்டிலிருந்து வந்து படிக்கும் Sister Theresa என்பவளும் மற்றகிறிஸ்தவப் பெண்களுந்தான் அவளுடன் கூடிக்கூடிப் பேசுவது வழக்கம். அவர்கள் தான் கதீஜாவை மதம் மாற்றுவதற்காக அழைத்துச்சென்று விட்டார்கள் என்று தீர்மானித்தே விட்டார்கள். சந்தேகத்துக்குக்கூட இடம்வைத்துக் கொள்ளவில்லை—நானே போலீஸாரை அழைத்துச்சென்று கான்வெண்டில் எங்கு கதீஜாவை வைத்திருப்பார்கள், என்று சோதனை செய்து கண்டுபிடிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். எனக்கு அது இஷ்டமில்லை. பிறகு போலீஸார் வேண்டாம், நாமே போய் மரியாதையாக அவர்களிடம் விஷயத்தைத் தெரிவிப்போம் என்று நயமாகச் சொல்லி ஸ்ரீ யாகுப்ஹாஸனுடன் அன்று மாலை கான்வெண்டுக்குப் போய் அங்குள்ள தலைவர்கள் இருவருடன் விஷயத்தைச் சொன்னோம். அவர்கள் நிரம்ப மரியாதையுடன் பேசி, தங்களுக்கு இதில் ஒரு சம்பந்தமும் இல்லை யென்றும் தங்களுக்கும் ஒன்றும் தெரியாதென்றும் சொல்லிவிட்டனர்.

ஏறத்தாழ ஒரு மாதம் வரைக்கும் தகவல் எதுவும் கஜீதாவைப்பற்றித் தெரியவில்லை—இதற்கிடையில் ஒரு நாள் மிஸஸ் மார்டின் ஸ்கூலுக்குவந்து மிஸஸ் யாகுப் ஹாஸனிடம் பேசினார்கள். நான் பேச்சில் அதிகம் கலந்து கொள்ளாமல் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு கிறிஸ்தவர்களுக்கும் மகமதியர்

களுக்கும் உள்ள மன வேற்றுமைகள், அவர்களது மத விஷமமான காரசாரமான அபிப்பிராய பேதங்கள் இவற்றைப்பற்றிய சமாசாரங்களை நிரம்பத் தெரிந்து கொண்டேன். அதிகம் காரஸாரமாக மதத்தைத் தாக்கிப் பேசியது யாகுப் ஹாஸன் தான். அந்த மாதம் 3, 4 முறை முஸ்லிம் பிரமுகர்கள் கூட்டம் கூடி இதைப்பற்றிப் பலபேர் வீராவேசத்துடன் பேசி கிறிஸ்தவர்களுடைய சூழ்ச்சி தான் இது, அவர்கள் கதீஜாவை எப்படியோ ஸ்கூலிலிருந்து அப்புறப்படுத்தி மதம் மாற்றிவிட்டார்கள். இதைப் பற்றி உடனேநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றெல்லாம் உருது பத்திரிகைகளில் பத்தி பத்தியாக எழுதினார்கள். ஒருநாள் அப்போது டெப்டி டயரெக்டராயிருந்த ஸ்ரீமான் Candeth அவர்கள் வந்து பேசி ஸ்கூலைச் சுற்றிப் பார்த்துவிட்டு கோஷா அல்லாத ஒன்றிரண்டு உபாத்தினிகளிடம் பேசிவிட்டுப் போனார். கடைசியாக துப்பறியும் ரகசியப் போலீஸார் கதீஜாவைக் கண்டு பிடித்தார்கள்.

விஷயம் சுருக்கமாக கீழ்வருமாறு-. ஸ்ரீமதி யாகுப் ஹாஸனுடைய கார்டிரைவர் ஒரு கிறிஸ்தவன். கதீஜா யாகுப் ஹாஸன் வீட்டுக்குவிடுமுறை நாட்களில் சில சமயம் போய் வரும்போது டிரைவரிடம் சிநேகம் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே அவன் தான் கதீஜாவை தன்னுடன் வரும்படித் தூண்டி 6 ஆந்தேதி அதிகாலையில் அவளை அழைத்துப்போய் தன் பெற்றோர்களிடம் விட்டு அவளை வெளியில் வராமல் மறைத்துவைத்திருந்ததாயும் ஒரு மாதத்துக்குப் பிறகு அவள் தைரியமாய் ஒரு குழாயடியில் வந்து குடத்தில் தண்ணீர் நிரப்பி எடுத்துக்கொண்டு போனபோது ஒரு C. I. D. கவனித்து அவளை அழைத்துப்போய் நேரே ஸ்ரீ யாகுப் ஹாஸனிடம் விட்டுவிட்டான். அதன பிறகு நடந்த யாவும் பகிரங்கமாகாமல் மர்மமாகவே நடத்தப்பட்டது. முஸ்லிம் மத குரு ஒருவர் வந்து திரும்ப அவளை முஸ்லிமாக்கி ஒரு மாப்பிள்ளைமார் ஜாதியனுக்கு விவாகம் செய்துவைத்து வெளியூருக்கு அனுப்பிவிட்டதாகவும் வதந்தி. கதீஜாவை கண்டு பிடிக்கும் வரைக்கும் இருந்த ஆர்ப்பாட்டமும் கூப்பாடும் அவள் கிடைத்த பிறகு "கப் சப்" என்று அடங்கியே போய்விட்டது. ஒரு மாதமாய் எனக்கிருந்த மனவேதனையும் அடங்கி நிம்மதி ஏற்பட்டது. (தொடரும்.)

மகாத்மாஜி ஸேவா சங்கம், திருவல்லிக்கேணி

தலைவியின் சஷ்டி பூர்த்திவிழா வைபவம்.

மார்ச்சு 5 ந் தேதியன்று மாலை ஸ்ரீமதிகாயனபடு கீர்த்தனபடு ஸரஸ்வதிபாய் அவர்களையும் அவரது பர்த்தா ஸ்ரீ ராகவேந்திர ராவ் அவர்களையும் சங்கத்தில் திரளான கூட்டத்தின் முன்பு வரவேற்று மாலைசூடி மேளதாளத்துடன் வரிசைதட்டுகளுடன் ஊர்வலமாய் வஸந்தபங்களாவுக்கு ஸ்ரீ அண்ணங்கராசாரியஸ்வாமி, ஸ்ரீ. க்ருஷ்ணசார் முதலிய மகான்கள் உள்பட சென்று மங்கள ஆரத்தி எடுத்தபின் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்வாமிகளின் தலைமையில் விழா மிகமிகச்சிறப்பாக ஆரம்பமாகியது.

காரியதரிசி வை. மு. கோ. எல்லோரையும் வரவேற்ற பிறகு ஸ்பஷ்டகானகலாமணி. ஸ்ரீமதி சுலோசன மகாதேவனும் ஸ்ரீமதி லலிதா பாய் சாமண்ணவும் ப்ரார்த்தனை கீதம் பாடினார்கள். பிறகு ஸ்வாமி தமது ஒப்புயர்வற்ற ப்ரஸங்கமாரியால் ஸ்ரீமதி பாயம்மாளின் கலைத்திறனைப் பாராட்டி ஆசீர்வதித்த பின் சங்கத்தில் செய்துள்ள ஸ்வர்ணகங்கணத்தையும், ஹரிகதாகலா நிதி என்கிற பட்டம் பொரித்தபதக்கத்தையும் வழங்கி ரவிக்கை, கதர் சால்வை, இரண்டையும் முறையே தம்பதிகளுக்குக் கொடுத்து ஆசீர்வதித்தார். ஸ்ரீமான்கள், ராமஸ்வாமி சாஸ்த்ரிகள், பி. ஸ்ரீ., பரசுராமன், சகோதரி சுபலக்ஷ்மியம்மாள், முதலியோர் தலைவியின் கலாஸேவையைப்பாராட்டிப் பேசினார்கள் பிறகு தலைவி தனது சந்தோஷத்தையும் வந்தனத்தையும் தெரிவித்தார். நடராஜநாட்டிய நிகேதன மாணவிகள் ஆசார்யப்ரபாவம் என்றநாடகத்தை நடித்தார்கள். பாலிகா கழகத்தினர் வெள்ளிப்படம் விளக்கு முதலியவை அளித்தார்கள். மங்களத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

மார்ச்சு 7-ந்தேதி சங்கம் பிறந்த நாளாகையால் ஸ்ரீமதி ரங்கப்பிரியையின் தலைமையில் சங்கிரகமாக கூட்டம் நடைபெற்றது. மார்ச்சு 14-ந்தேதி காரியக்கமிட்டி கூடி வருஷாந்திர அறிக்கை சமர்பித்ததோடு தேர்தலும் நடத்தினார்கள். ஒரு அங்கத்தினரின் அசௌகர்யத்தினால் அவருக்குப்பதில் E. ஸ்ரீனிவாஸம்மாளைக் கமிட்டியில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பார்த்தஸாரதிஸ்வாமி ஸபாவில் நடத்திய திருப்பாவைப்போட்டியில் பாடியவர்களுக்கு சங்கம் மூன்றுவது பரிசு வழங்கியது. G. P. கமலா மூன்றுவதுபரிசு பெற்றாள். இம்முறையும் பைசானிமாதவச் செட்டியார் சாரிட்டியில் நடத்திய பண்ணிசைப் போட்டியில் G.P. கமலா, S. லக்ஷ்மி பரிசுபெற்றார்கள். 16-ந்தேதி யுகாதி பண்டிகை ஸ்ரீமதி N. புஷ்பம்மாள் தலைமையில்நடைபெற்றது. ஸ்ரீராம நவமி பஜனை உத்ஸவம் அன்றுமுதல் துடங்கி 9 தினமும் தவறாமல் நடந்தது.

சங்கத்தின் 5-வது ஆண்டு விழா.

20-ந்தேதி, ஸ்ரீமதி உய்யூர் ராணி, அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாகநடந்தது. அறிக்கை அச்சிட்டதை வினியோகித்ததும், தலைவி ஸரஸ்வதிபாய் வரவேற்றுப் பேசினார். K. R. ராதா ப்ரார்த்தனை கீதம் பாடினாள். நடராஜநாட்டிய நிகேதனமாணவிகள் முதல்தரமான நாட்டிய நாடக விருந்தளித்தார்கள். மிகச்சிறப்பாக விழா இனிதுமுடிந்தது.

21-ந்தேதி பாலிகாகழகத்துச் சிறுவர் சிறுமிகளுக்குப் பாட்டுப் போட்டி நடந்தது. ஸ்ரீமதிகள் M.C. ஜானகியம்மாள், T. A. பத்மாஸனி, M. P. சுகந்தா மூவரும் நீதிபதிகளாக இருந்து நடத்திக் கொடுத்தனர். ஜெயித்த குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

23-ந்தேதி காரியகமிட்டிக் கூட்டம் நடந்தது. அன்று மாலை திருக்குடந்தை ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸராகவாசார்ய ஸ்வாமியால் ஆழ்வார்கள் அனுபவித்த ராமன் என்கிற அத்புதமான விஷயம் உபன்யாஸம் நடைபெற்றது. ஸ்ரீ உபன்யாஸ ஸ்வாமிகள் சங்கத்தைப் பாராட்டித்தமது அன்பளிப்பாக 10 ரூபாய் நன்கொடையளித்தது மிகமிகப் போற்றக் கூடிய விஷயமாகும். தலைவி ஸரஸ்வதிபாய் வந்தனோபசாரம் கூறினார்.

24-தேதி ஸ்ரீராமநவமி உத்ஸவம் K. R. ரங்கநாயகியம்மாள் தலைமையில்நடைபெற்றது. பலர் ரஸமாகப் பேசினார்கள், பாடினார்கள். விழாமிகச் சிறப்பாக நடந்தது. ப்ரஸாதங்கள் ஏராளமாகவழங்கப்பட்டது. 25-ந்தேதி விடையாற்றி உத்ஸவம் பஜனையுடன் நடந்தது.

சுதந்திரப் பறவை

வை.மு.கோ. 107-வது நாவல்

11

முன்பின்னறியாதவர்கள் கூட வீடுகளில் வளர்க்கும் கிளிப் பிள்ளைகளைப் பார்த்த உடனே அதன் பேச்சுக்களைக் கேட்ட மாத்திரத்தில் இந்த கிளி இன்ன இடத்தில் இன்னாரால் வளர்க்கப்பட்டது என்று சொல்லிவிடலாம். இதற்கு திருஷ்டாந்தமான கதைகள் உண்டு. நல்ல பக்தசிகாமணிகளால் வளர்க்கப்படும் கிளிகள், ராமா! ரங்கா...என்று பகவன்னாமத்தைச் சொல்லியதாயும், மாமிச வ்யாபாரி வளர்க்கும் கிளி, வெட்டு, கிள்ளு, தோலை உரி...என்று சொல்வதாயும், வறுமையில் திளைபவன் வளர்க்கும் கிளியாயின்...ஐயோ! ராச்சாப்பாடு வருமா... பகல் சாப்பாடு கிட்டுமா... என்றே தானும் கத்துமாம். இது கர்ண பரம்பரையான வார்த்தைகள். கர்ணபரம்பரையான எந்த ஒரு விஷயத்திற்கும் தனி மதிப்பும் தனிப் பெருமையும் உண்டல்லவா! சில சமயங்களில் அதுவே ப்ரமாணமாகவும் உபயோகப்பட்டு அனேக காரியங்களைச் செய்துமுடிக்கும் சக்தியும் பெற்றுவிடுகின்றது.

அதுபோல் இந்த நிமிடம்வரையில் ஏதோ மேல்வாரியாய் தன் போக்காகக் கவலையற்று இருந்துவிட்ட சுந்தரத்தின் இதய வீணையில் கவலையும் கண்ணீரும் தோய்ந்த துக்ககரமான முகாரிராக த்வனியில் எப்படியோ கீதம் பாடத் தொடங்கிவிட்டது. கிளிப் பிள்ளையைப்போல் தாயின் துயர் தீருமா! குடும்பத்தின் கண்ணியம் நிலைக்குமா! என்று புஷ்பா அலறும் அலற்றல் அவன் வாயிலும் தானாகப் புகுந்து கீர்த்தனம் செய்யக் கிளம்பியது. இச்சமயத்தில் இரும்பினும் கொடிய இதயத்துடன் பேசிச் சென்ற ராக்ஷஸ சகோதரியின் மீது பாய்ந்து அப்படியே நசுக்கிக் கொலை செய்துவிடலாமா! என்றுகூட அதீதமாகத் தோன்றி ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது. மாமிசக்காரன் வளர்க்கும் கிளி பேசுவதுபோல் அராக்கட்டைத்தனமாய் நிர்த்தாக்ஷிண்யமாய் அல்ப புத்தியுடன் பேசிப்பழகும் கூட்டத்தில் இவளும் பழகும் விநோதத்தை மிகமிக தெளிவாய் எடுத்துக் காட்டிவிட்டது.

கந்தஸாமிக்குத் தான் பெண்பெற்ற பரிபவமும் சுதந்திரப் பறவைபோல் தன்னிஷ்டப்படி பறந்து திரிந்து அலைந்து பழகும்படி விட்டுவிட்ட கோராமையின் விபரீதமும் இப்போதுதான் இன்னும் நன்றாகப் பளிச்சென்று தெரிந்து இதயம் துணுக்குற்றது. ஆதியில் தன் சகோதரியும் பெற்றோர்களும் படித்துப் படித்துச் சொல்லியதும் இடித்துக் காட்டிய

தும் பல உபமானங் காட்டி வயிற்றெரிச்சலுடன் கண்டித்ததும் அப்போது வேம்பு போலத் தோன்றி வெறுப்பும் கோபமும் வந்ததால் அவர்களை எல்லாம் விட்டுவிலகி விரோதபாவத்துடன் வேறு ஊருக்குக் குடி ஏறி வேலையை மாற்றிக்கொண்டு வந்ததன் பரிபவம் இப்போதுதான் இன்னும் நன்றாக மனத்திரையில் ப்ரகாசித்து வருத்தியது.

கண் கெட்டபிறகு சூரியநமஸ்காரம் செய்வதுபோல் இனி எதை எண்ணி வருந்தினால் என்ன, முட்டிக்கொண்டால்தான் என்ன? மக்களுக்கு சத்ரு மாதா பிதா. என்கிற பழமொழி இப்போதுதான் சரியென்று இதயத்தில் தைத்தது. அப்பழமொழியின் உண்மை எத்தனை தூரம் ப்ரகாசிக்கின்றது! ஆதியில் என் பெற்றோர்கள் என்னைக் கண்டித்தபோது என் வாழ்க்கை இன்பத்திற்கு முட்டுக்கட்டையைப் போட்டு என்னைப் பாழாக்குவதாக எண்ணி என் பெற்றோர்களை நான் அனியாயமாய் வெறுத்தேனே. என்னுடைய அவலமான வாழ்க்கையைப் புனிதமாக்க எண்ணியவர்களிடம் நான் கொண்ட மனோபாவத்தை—மகத்தான பாதகத்தை—சற்றும் கவனியாமல் என் மக்களுக்கு நானே சத்ருவாகிவிட்ட வெட்கக்கேட்டை வயிற்றெரிச்சலை யாரிடம் முறையிட்டால் தீரும். எதை வேண்டாமென்று தடுக்கவேண்டுமோ அதையே வைத்து ஆதரித்ததன் பலன் நெருப்பைப் பெட்டியில் வைத்துப் பூட்டியதுபோலாகிவிட்டது....என்று தனக்குள் தானே எண்ணி இடிந்துபோய் விட்டார்.

தகப்பனாரின் மனம் எப்படித்தான் துடிக்கின்றது—குமுறுகிறது—விசனப் புயலடித்துத் தத்தளிக்கின்றது—என்பதை ஒரு நொடியில் அறிந்துகொண்ட புஷ்பா வயதில் மிகச் சிறியவளாயினும் தன் பெற்றோருக்கு நேர்ந்துள்ள அவமானத்தின் எதிரொலியையும் பயங்கரத்தையும் நன்றாக உணர்ந்து உருகும் தன்மையைப் பெற்றுவிட்டாள். சின்னஞ்சிறு பறவை—இரக்கையே முளைக்காத சிறு குஞ்சு, எப்படிப் பறந்து செல்ல முடியும்? ஆனால் தன் தாய் இரைதேடப் பறந்துசெல்வதைப் பார்க்கும்போது தானும் பறக்கவேண்டும் என்றுமனத்திற்குள் அடித்துக் கொள்ளுமாம். அந்த ஆசையும் துடிதுடிப்புமே இரக்கை வளரச்செய்து பறக்கவும் சக்தி கொடுத்துவிடுமாம். இது பக்ஷிசாஸ்திரங்களின் தத்துவம். அதுபோல் இரக்கை முளைக்காத சின்னஞ்சிறுமியான புஷ்பா எப்படித்தான் இத்தகைய விபரீதச் சம்பவமாகிய காட்டுவெள்ளத்திற்கு அணைகட்டமுடியும்?

இந்த நிமிஷம் தப்பினால் மறுநிமிஷம் எப்படியாகுமோ! என்று தாயின் நிலைமை தவிக்கச் செய்கிறது. கால் வயிறு கஞ்சியாவது ஒருதினத்திற்கு ஒருவேளை வார்க்கும் நிலைமையிலுள்ள சுந்தரத்தின் வேலை நிற்கச் செய்வதற்கு 500 ரூபாய்

உடனே கட்டாவிட்டால் அவனும் ஒரு வாய்க்கஞ்சிக்குப் பஞ்சாய்ப்பறக்கும் கதியை அடைக்துவிடநேருமே, என்ன செய்வது ! என்று தத்தளிக்கிருள் பாவம்!

இத்தகைய மிகவும் நெருக்கடியான சோதனையான பயங்கரமானநிலைமை உண்டாகும் சமயத்தில்தான் மக்களுக்கு அதிதமான எண்ணங்கள், துணிபுகள், பயமற்ற ராக்ஷஸச் செய்கையில் ப்ரவேசிக்கும் தன்மை, பாவம், புண்ணியம், என்கிற பாகுபாடுகளையே மறந்துவிட்டு நெஞ்சும் இதயமும் மறத்துப் போனத் தன்மையில் எங்குமில்லாத விபரீத பலமும் தைரியமும் எதிர்காலத்தைப்பற்றிய நினைப்பே அற்றுவிட்ட சூன்ய நிலைமையும் இதயத்தில் குடிகொண்டு விடுகிறது. இத்தகைய நிலையை அடைந்தவர்களே தற்கொலை புரிந்து கொள்வதும் பிறரைக் கொலைசெய்வதும், திருடுவதும் தீம்பிழைப்பதும், பழிக்குப்பழி தீர்த்து வஞ்சத்தைப் போக்கிக் கொள்வதும் போன்ற தீயகாரியத்தில் சடக்கென்று புகுந்துவிடுவதை பிரத்யக்ஷமாகப்பார்க்கிறோம். இதுபோன்ற உணர்ச்சி மேலிட்டால் உருக்குலைந்து போகும் படிக்குச் செய்துவிடுவதுதான் சாமான்ய மனித உணர்ச்சிக்கு உண்டாகும் குணம்.

மேல்குறித்தவைகள் தோன்றினும் அவைகளையும் நீக்கி ஜெயித்துத் தீமையைக் கொளுத்திப் புகைத்துச் சத்தியத்தை தர்மத்தை... த்யாகத்தை—கடவுள் பக்தியாகிய நம்பிக்கை என்கிற துணையை...மேற்கொண்டு அம்முறையில் நடந்து வாழ்க்கையில் இன்பத்தைக்கண்டு அனுபவித்து வெற்றி பெறக்கூடியவர் எங்கோ ஆயிரத்தில் ஒருவர்தான் தேருவார்கள். அரைகுறை ஆத்திரக் காரியத்தில் இறங்கிய பிறகு புத்தி வந்து திருந்தியவர்களும்... திருந்த முயற்சி செய்து அம்மட்டுடன் நிறுத்திக் கொண்டவர்களும் சிலர் உண்டு. உலகம் பலவிதமல்லவா! ஆற்றுமணலை எண்ணினாலும் எண்ணலாம். மக்களின் விசித்ரமனோபாவங்களை எண்ணிக் கையில் வைக்கமுடியுமா.

இதே புஷ்பா சற்றுமுன்பு முத்து தன் அண்ணனின் கைக்கடியாரத்தைத் திருடிக்கொண்டு வருவதாகச் சொல்லிய போது அபாரமான கோபத்தை யடைந்து பலமான உபதேசங்களைச் செய்து அவனை அதட்டினாள். அதே மனுஷியின் இதயத்தில் இந்த நிமிஷம் எத்தகைய விபரீத உணர்ச்சியும் துணிவும் உண்டாகியது என்பதை அவளாலேயே நம்ப முடியவில்லை.

எதுஎப்படியானாலும் தன் அக்காகள் இருவரும் வெளியே போயிருக்கிறதால் அவர்கள் தனி விடுதியின் பூட்டைஉடைத்துக்கொண்டு உள்ளே சென்று பெட்டிகளையும் உடைத்து என்ன அகப்படுகிறதோ அவைகளைக் கொள்ளையடித்தாகிலும் தற்சமயம் குடும்பத்திற்கு நேர்ந்துள்ள மகத்தான சோதனைக்

குப் பரிகாரம் தேடிக்கொடுக்க வேண்டும். இதனால் என் ஒருத்திக்கு உண்டாகும் பாவத்தின் பரிபவத்தை நான் அனுபவிக்கிறேன். தெரிந்து செய்யும் பாவச் செயலுக்குப் பரிகாரமே இல்லை என்பதும் எனக்குத் தெரியும். இச்சமயம் இந்த ஒரு வழியைத்தவிர வேறு வழியே இல்லை. ஒரு மகத்தான நன்மையைச் செய்வதற்காக மற்றொரு மகத்தான பாதகத்தைச் செய்தேனும் விமோசனத்தைத் தேடுகிறேன்.

நான் செய்வது குற்றம் தான் எனினும் எந்த ஒரு பெற்றோர்களின் இன்பவாழ்க்கையின் பாலத்தை உடைத்தெறிந்து துன்ப ப்ரவாகத்தில் வீழ்த்தித் திணயச் செய்தார்களோ! அதே பாவிகளின் செல்வத்தைக்கொண்டே நான் ஏன் நன்மை செய்யக்கூடாது. இதில் குற்றமோ, தண்டனையோ எதுவாயினும் நான் ஏற்கத் தயாராயிருக்கிறேன். இதனால் எது எப்படியானாலும் ஆகட்டும் என்று எங்கிருந்தோ உண்டாகிய ஒரு அஸாதார தைரியத்தை யடைந்துத் தனக்குள் முடிவு கட்டிக்கொண்டு துணிந்துவிட்டாள்.

கோண்டியை மணந்து த்யாகத்தினால் காப்பாற்ற எண்ணிய இதயத்தில் எப்படியோ இத்தகைய பயங்கர யோசனை உண்டாகியதே என்று அவளுடைய உள்ளமே வியந்தது. எந்த உணர்ச்சியையும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் பூசி மெழுகி மறைத்துத் தற்கால சாந்தியாய் எல்லோரையும் ஒருவாறு சமாதானத்தைச் செய்தாள். தீய காரியம் என்றறிந்தும் அதைத் துணிந்துச் செய்துவிட மனம் துடித்தது: சமயத்தை எதிர்பார்த்துத் துள்ளியது.

12

சுந்தரம்! இங்குவாப்பா! ஏன் தலைகுனிவு? பயப்படாதே! வா, பத்திரிகையில் நாங்கள் விஷயங்களைப் படித்துப் புரிந்துகொண்டபிறகு இனி நீ மறைக்கவோ, மூடிவைக்கவோ வேண்டாம்: இதே வருணவை என் சிநேகிதன் ஒருவனுக்கு இரண்டாந்தாரமாக மணம்செய்துத் தரும்படிக் கேட்டதற்கு உங்களப்பா தூக்கிக் கவிழ்த்ததுபோல் பேசினார். இருப்பினும் நான் பேசாமல் போய்விட்டேன். தலைவிதி இப்படி மதம் விட்டு மதம் மாறும்படியான வழியில் இழுத்துச் செல்கையில் அதைத்தடுக்க யாரால்தான் முடியும்? அதுகிடக்கட்டும். இப்போதுதான் நான் உன் ஆபீஸ் அதிகாரியை ஒரு காரிய நிமித்தமாகச் சந்தித்தேன். உன் வேலைக்காக சிபார்சு செய்தவனும் நானே யாகையால் 500 ரூபாய் டிப்பாஸிட்டுக் கட்டாமல் நீங்கள் தவணை கேட்பதுபற்றி அருவருத்தும் வெறுப்புற்றும் பேசினார். "சக்தியில்லாதவர்கள் கட்டுவதற்கு எங்கே போவார்கள். வீணாக என் பெயர் கெட்டுவிடுகிறது.

நான் இதில் வீண்வார்த்தை வாங்கமாட்டேன், உடனே கட்டாவிட்டால் நான் அவனை வீட்டிற்கனுப்பிவிடுவேன்!" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். அதைத் தெரிவிப்பதற்காகவே நான் வந்தேன். நீயே எதிரில் வந்து விட்டாய். ஏதோ ஒரு பழைய விச்வாஸத்தைக் கொண்டு நான் செய்து வைத்த வேலையைக் காப்பாற்றிக் கொள்ளாமல் என்பேரையும் கெடுத்து நீங்களும் கெட்டுப் போவது நியாயமா! "இனிமேல் நான் ஜவாப்தாரியல்ல, உங்களிஷ்டப்படியேசெய்யலாம்" என்று சொல்லிவிட்டேன். உங்கப்பாவைப்பார்க்கக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. இம்மாதிரி முறை தவறிச்செய்யும் காரியத்தில் அவனும் இறங்கி விட்டது எங்களுக்கெல்லாம் கட்டோடு பிடிக்கவில்லை. ஆகையால் இனி என்னை ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

என்று எதிராளியின் பதிலுக்கே எதிர்பார்க்காமல் முடுக்கிவிட்டமெஷின்போல் சொல்வதைக்கேட்டு சுந்தரனுக்கு ஆகாயமும் பூமியும் ஒன்றாகச் சுற்றுவதுபோல் வேதனை செய்தது. இடைஇடையே தான் பேச வாயெடுத்தும் ஒரு வினாடிகூடநிற்காமல் அவர் பேசியதால் மனத்தில் அதிர்ச்சியே உண்டாகித் தவித்தது. நடுவீதி என்பதைக்கூடப் பார்க்காமல் ......ஸார்! உங்கள் காலைப்பிடித்துக் கொண்டு கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். எங்கப்பா இன்னும் ஒரு மாத தவணை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார். அதற்குள் நாங்கள் எப்படியாவது ப்ரயாஸைப்பட்டுக்கட்டி விடுகிறோம். எங்கள் குடும்பம் தற்சமயம் புயல்காற்றில் அகப்பட்ட மரக்கலம்போல் தத்தளிக்கின்றது, ஸார்! ஒருவாய்க்கஞ்சிக்குப் பஞ்சாய்ப்பறக்கும் நிலைமையில்......

என்று முடிப்பதற்குள் அந்த மனிதன் பெரியதாய் கடகடவென்று இளித்தபடியே ... அடே டே டே......சுந்தரம் சுந்தரம்! ஏதுடா இது தடபுடலா மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பறைசாற்றும் அற்புதப் பிறவிகளின் எழுத்தைப் போல் பேசுகிறாயே தேவலையப்பா! கந்தசாமி முதலியார் காலத்தைக் கன்னாபின்னா வென்று செலவிட்டுப் பாழாக்கி விட்டதை நீ அப்படியே தலைபுரட்டி நிமிர்த்தி விடுவாய் போலிருக்கிறதே அடேயப்பா! மூன்று மாத தவணை ஒருதரம் ஆயிற்று. பிறகு இரண்டு மாதம்...இப்போது ஒருமாதம்... இல்லையா. யாரிடமடா இத்தகைய பசப்பு வார்த்தை பேசுகிறாய்...இன்னும் ஒருமாதத்திற்குள் உங்கள் புதிய மருமகப்பிள்ளை ஸையத் உஸேன் அவர்கள் அனுப்பிவிடுவாரா! அல்லது நாளையே மருமகப்பிள்ளையாக வருவதற்குத்தயாராக இருக்கும் மிஸ்டர் தாமஸ் ஜான், அவர்கள் கொடுப்பார்களா! அல்லது உன் அண்ணன் குதிரைப்பந்தயத்தில் ஜெயித்துப் பணத்தை மூட்டைக்கட்டிக் கொண்டு வந்து......தானீஷாபாஷாவிடம்

ராமதாஸரின் கடனை ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் கொட்டித் தீர்த்ததுபோல் தீர்த்துவிடப் போகிறுனு...போடா! வகையற்றவனே! இனிமேல் இந்த ஸால்ஜாப்புக்கும் தவணைக்கும் தவலைக்கும் இடமில்லை, ஜாக்ரதை! இனி என்னிடம் இவ்விஷயமாகப் பேசவே வேண்டாம், சந்திக்கவும் வேண்டாம். என்று மிடுக்காகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

சுந்தரத்தின் நெஞ்சையடைக்கும் துக்கத்தில் தேம்பித் தேம்பி அழுகையே வந்துவிட்டது. நடுவீதி என்பதையும் தான் ஒரு ஆண்பிள்ளை உத்யோக உடையில் போகிறோம்.........என்பதையும் அறவே மறக்கும்படியாகி விட்டது. ஏற்கெனவே நேரமாகி விட்டது. இன்னும் தாமதமானுல் அதிகாரி அதற்காக வேறு திட்டுவானே என்கிற பயத்துடன் ஓட்டமும் நடையுமாகச் சென்று பஸ்ஸைப் பிடித்து ஏறினுன்.

பஸ்ஸில் இருப்பவர்களில் பெரும்பாலோர் கலப்புமணத்தின் அலங்கோலத்தையும் தனது மற்ற இரண்டு தமக்கைகளின் விபரீத நடத்தையையும் பற்றியே பேசிச் சிரித்து தூஷித்து வம்படிப்பதைக் கேட்கமுடியாது மனது துடிக்கிறது. தான்தான் அந்தப்பாவிகளின் தம்பி என்று தெரிந்து தான் இப்படிப் பேசி மனத்தைப் புண்ணுக்குகிறுர்களோ என்ற சந்தேகம்கூட உண்டாகி உதைக்கிறது. இதுபரியந்தம் ஒருவிதமான கஷ்டங்களையும் அனுபவிக்காமல் சுதந்தரப் பறவைபோல் திரிந்துகொண்டிருந்த தனக்கு இப்போதுதான் சங்கடப் பறவைபோல் இராகோடிந்த பறவைபோல்...தாங்க மாட்டாத நிலைமை உண்டாகிவிட்ட விதி நன்றுகத்தெரிந்தது.

புஷ்பாவின் விஷயத்தில் முன்னத்யாயத்தின் இறுதியில் சொல்லியபடி தாங்கமுடியாத...சமாளிக்க வகையற்ற—இனி வேறு வழியில்லை என்கிற தத்தளிக்கும் நிலைமை வந்துவிட்ட போது அதீதமான அஸுரச் செயல்களில் கூட மனது தாவி விடும் என்கிற மனித உணர்ச்சியின் தத்துவப்படிக்கு அது எல்லோரையுமே ஆட்டிவைக்கத்தான் செய்யும்: இந்த விதிக்கு விலக்காகி நிற்பவர்கள் ஒரு சிலர்தான்.

சுந்தரத்தின் இதயக்கடல் கோரமான புயலடித்துக் கொந்தளிக்கின்றது. எடுத்த எடுப்பில் 500 ரூபாயிக்கு எங்கு போவது. உடனே கட்டாவிட்டால் கையில் கப்பரை ஏந்திப் பிச்சை எடுக்கும் ஒரேஒரு வழியைத்தவிர வேறு மார்க்கமே இல்லை. அதற்கும் தனது அழகும் தனது குடும்பத்தின் தற்கால விபரீத நிலைமையும் இடங்கொடுக்காதே. கடன்காரர்கள் சூழ்ந்துவிடுவார்களே! தாயாரின் மனக்கொதிப்பில் அவள் உயிரும் நீங்கிவிடுமாயின் இத்தனைபெரிய சம்சாரத்தின் பாரத்தை யார் சுமப்பது? எப்படித் தாங்கி ஜெயிப்பது? புரியாத நிலைமையில் தத்தளிப்பதைவிட உயிரையே விட்டுவிடலாம். அதுதான் இந்த நிமிஷத்திற்குச் சற்று என்வரையில் பரிகாரமாகும்...

ஐயோ! ஆண்பிள்ளையாக இருக்கும் நானா இப்படி எண்ணுவது? படித்தமுட்டாளாகிய நானா இவ்வாறு நினைப்பது? படிப்பும், அனுபவமும் அதிகமில்லாது வயதிலும் சிறியவளான புஷ்பாவின் உயர்ந்த த்யாக எண்ணத்திற்கு முன்பு நான் கேவலம் கோழையாய்த் தற்கொலைக்குத் துணிந்து பெற்றோருக்கு இந்த துக்கத்தை வேறு வைப்பதா...சீச்சீ... இது சரியில்லை...இதனால் எல்லாம் காரியத்தைச் சாதிக்கவே முடியாது...ஏன் நான்ஒரு கொள்ளைக்காரனாக ஆய்விட்டால்... பிடிபடாத பக்காத் திருடனாக ஆய்விட்டால்...என் குடும்பத்தையும் காப்பாற்றி நானும் சாகாமலிருக்கலாமே...சேச்சே... போயும் போயும் கொள்ளை இடுவதா! பிறர்பொருளை அபகரித்து இந்தச் சரீரத்தை வளர்ப்பதா...கேவலம் அல்பத்திலும் அல்பச்செய்கை அனாகரீகச் செய்கையல்லவா இது... என்று ஒருவிதத்திலும் மனது நிலைகொள்ளாமல் தவித்துத் துடித்துக் குழம்பிக் குமுறும் வேகத்தில் தான் இறங்கவேண்டிய இடத்தையும்மறந்துபோய்க்கல்லாய்ச்சமைந்துவிட்டான்.

தான் இறங்கவேண்டிய இடத்தைக் கவனிக்காது ஒரே குழப்பத்துடன் தலைசாய்ந்துபதுமைபோல் உட்கார்ந்திருந்த சுந்தரம் எத்தனை அணாவுக்கு டிக்கட்டு வாங்கி இருக்கிறான் என்பதை உணர்ந்து பஸ் கண்டக்டர், நீங்கள் இறங்குங்கள் ஸார்!...என்று கூவிய பிறகுதான் சற்று தெளிவுபெற்று அலறியடித்தவாறு பார்த்தான்.

தான் இறங்கவேண்டிய இடத்திற்கு வெகுதூரம் தாண்டி வந்துவிட்டதையும் மணி பின்னும் அதிகமாகிவிட்டதையும் கண்டு திடுக்கிட்டான்...இதென்ன போராத காலத்தின் கொடுமை! சோதனைக்குமேல் சோதனையாக இருக்கிறதே! என்ன செய்வேன். என்று கலங்கியபடியே தலை தெரிக்க ஆபீஸுக்கு வந்துசேர்ந்தான். எஜமானிடம் சரியானபடி மரியாதை கிடைக்கும் என்று நன்றாகத் தெரியும். இதையே ஒரு சாக்காக வைத்துக்கொண்டு டிபாஸிட்டுக் கட்டாமலிருப்பதை முக்யமாக வைத்து எங்கே இப்போதே வீட்டிற்கனுப்பிவிடுவாரோ அனேகமாய் அப்படித்தான் நடக்கும் என்று மனத்துடிப்புடன் தன் விடுதியை எட்டிப்பார்த்தான்.

எஜமானன் உட்கார்ந்து வேலைசெய்துகொண்டிருந்தார். பயந்து நடுங்கியபடியே உள்ளே சென்று நமஸ்காரம் செய்தான். பயத்தின் வேகம் வெயர்வையாகக் கொட்டிவிட்டது. இவன் குரலைக் கேட்டதும் எஜமான் இவனை நிமிர்ந்துப் பார்த்தார்...“நான் அப்போதே நினைத்தேன். இன்று பத்திரிகை விஷயத்தைப்பற்றி வீட்டில் தடபுடல் விசேஷங்கள் நடக்கும்; கல்யாண சந்தோஷத்தை விசாரிக்க பலர் வருவர்; ...அந்த மகிழ்ச்சி உத்ஸாகத்தில் ஆபீஸையே மறந்து

வீவு போட்டாலும் போட்டுவிடலாம் அல்லது லேட்டாகவும் வந்து சேரலாம் என்று. அதேபோலத்தான் ஆயிற்று இம் மாதிரி விஷயத்தை முன் கூட்டித்தெரிந்திருப்பதனுல்தான் உன் தகப்பனுர் ஒருமாத தவணைகேட்டார்போல் தோன்று கிறது. மருமகப்பிள்ளை உஸேன் அவர்கள் பணமனுப்புவதாக ஏற்பாடு இருக்கலாம் இல்லையா? அதைப்பற்றி எனக்கெதற்கு? ஒருமாத தவணைக்கு எனக்குமேலுள்ள அதிகாரி ஒப்புக் கொள்ளவில்லை. ஆகையால் ஒரேவார தவணையை நான் மன் ருடிக் கேட்டு வாங்கியிருக்கிறேன். அதற்குள் பணம் கட்ட வில்லை என்ருல் நீ தானகவே மரியாதையாக நின்றுவிடலாம். என்மீது மனஸ்தாபப்படுவதற்கு இடமில்லை. போ...உன் வேலையை கவனிக்க...எந்த சால்ஜாப்பு வார்த்தைகளும் வேண்டாம்'' என்று கண்டிப்பான த்வனியில் கூறிவிட்டார்.

தான் சமாதானமாய்ப் பதில்பேசுவதற்கும் இட மளிக்காமல் திட்டமிடுவதுபோல் பேசிவிட்டதால் கண்ணீர் முட்ட தன் வேலைக்குச் சென்ருன். வீட்டில் புஷ்பா என்ன செய் கிருளோ! அம்மாவுக்கு எப்படி இருக்கிறதோ! சகோதரர்களும் சகோதரிகளும் வந்தார்களா இல்லையா! வேறு ஏதேனும் கலாட்டா நடக்காதிருக்கவேண்டுமே, என்று பலபல எண்ணங் களுடன் குழம்பித்தவித்ததால் வேலையே ஓடவில்லை. தனது விதி செய்யும் கூற்றில் வேலையில் ஏதாவது தப்புவிழுந்துவிட் டால் அதுவேறு உபத்திரவமாகிவிடுமே, என்ன செய்வது... எந்த வகையில் நாம் 500 ரூபாய் பணத்தை இன்னும் ஒருவா ரத்திற்குள் கொண்டுகட்டுவது, நினைத்தாலே பயமாயிருக்கி றதே, என்ன செய்வேன். ஆம்...ஏன் இனி தயங்கவேண்டும். வேலியே பயிரை அழிப்பதுபோல் என்னுடன் பிறந்தவர்களே என் குடும்பத்தையே நாசம் செய்து ஹதமாக்கும்போது அவர்களை ஏன் நான் நாசம் செய்யக்கூடாது. சூதாடுகிறவன், குதிரைப் பந்தயத்தில் கொட்டுகிறவன், குடியைக்கெடுக்கக் கள்ளத்தனமாய்க் குடிப்பவன், ஆகச் சகல அக்ருத்யங்களும் நிறைந்த பக்காசோதாக்களாகிய அண்ணன்களை ஏன் நான் மோசம்செய்யக்கூடாது. துராக்ருத வழியில் செலவாகும் பணம் தன் சொந்தக்குடும்பத்திற்குச் செலவானுல் குற்றமா!... சரி!...நான் எஜமானிடம் லீவுபோட்டுவிட்டு இப்போதே வீட்டிற்குப்போய் அப் பாவிகளின் பெட்டிகளை உடைத்தே பார்த்துவிடுகிறேன். எது அகப்பட்டாலும் விற்றுசுட்டு இந்த நெருக்கடியான நிலைமைக்குப் பரிகாரம் தேடுகிறேன். என்று ஆவேசத்துடன் முடிவுகட்டிக்கொண்டு சற்று நேரம் வேலைசெய்துவிட்டு எஜமான் எதிரில் வந்தான்.

தைரியமாய்ப் பேசத்துணியாமல் பயம் நடுக்குகிறது. தயங்கித் தயங்கி நின்ருன்...இவனைக்கண்ட எஜமானர், என் னடா சமாச்சாரம்! என்று அதட்டும்குரலில் கேட்டார்,

சுநதரம்:—ஒன்றுமில்லை, எனக்குத் தலைநோவு அதிகமாகப்பாதிப்பதால் வேலையே செய்யமுடியவில்லை, ஜுரம்வரும்போல் வேதனை செய்கின்றது. தயவு செய்து லீவுகொடுக்க வேண்டும், நாளைக்காலை கட்டாயம் வந்துவிடுகிறேன், அதற்குள் எங்காவது கிடைக்குமா என்று ப்ரயத்தனமும் செய்து பார்த்துப் பணத்துடன் வருகிறேன்... என்றான்.

இதைக்கேட்ட எஜமானர் கடகடவென்று சிரித்துவிட்டு, அடேயப்பா! தலைவலி ஜுரம் என்றுகூறி ஓய்வு எடுப்பதற்காக லீவு எடுக்கிறேன் என்கிறாய். கூடவே ப்ரயத்தனப்பட்டு நாளை காலையே பணத்துடன் வருவதாகவும் கூறுகிறாய். என்னடா செப்பிடுவித்தைபோல் பேசுகிறாய். எங்காவது புதையல் அகப்படுவதாயிருந்தால்கூட இரண்டு நாளாவது தாமதமாகுமடா! கொள்ளையடித்தாலும் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பித்துக்கொண்டு ஆரஅமர பணத்தை ஜீர்ணிப்பார்களேயன்றி இந்த கைக்கு அந்த கை வ்யாபாரம்போல் ஆகாதப்பா! நீ இன்று சரியான நிலைமையில் இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகையால் வீட்டிற்குப்போய் நாளைக் காலைவா! இன்னும் 5 நாள் தவணைக்குள் பணங்கட்டாவிட்டால் எவ்விதமான சாக்குப் போக்கிற்கும் இடமே இல்லை, நீயே மரியாதையாக வராமலிருந்துவிடலாம். மரியாதை என்பது முதல் தவணைக்குள் கட்டுவதேயன்றி வாய்தாவைப்பது அல்ல. ஒன்று. இரண்டு. மூன்று. என்று வாய்தாபோட்டாயிற்று. இனி உபயோகமில்லை: வாய்தா வைப்பதாக யோசனை இருந்தால் இன்றே அனுப்பிவிடுகிறேன்.

என்று அவர் கடுமையான த்வனியில் சொல்லும் சமயம் ‘‘ஸார்! கடவுள் க்ருபையினால் இதோ பணத்தைக்கொண்டு வந்திருக்கிறேன். அப்பாவுக்கு உடம்பு சரியில்லாததால் என்னிடம் கொடுத்தனுப்பினார். எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றும் வள்ளல் நீங்கள்தான் என்பதை ஒருபோதும் மறக்கமாட்டோம். கால்வயிறு கஞ்சிக்கு ஜீவனமளித்த உங்களை கடவுள் ரக்ஷிக்க சதா ப்ரார்த்தனை செய்கிறோம். அப்பா மிகவும் வந்தனம் கூறியனுப்பினார். இதைப் பெற்றுக்கொண்டு ரசீது கொடுக்கவும்’’

என்று ஒரு வீரப்பெண்மணியைப்போல் புஷ்பா சொல்லும் வார்த்தைகளும் அவள் 500 ரூபாயை நோட்டுக்களாக எண்ணிக் கொடுத்ததையும் கண்ட சுந்தரத்திற்கு ஒன்றுமே புரியாமல் தலைசுற்றுகிறது. கனவா! நனவா! என்கிற சந்தேகத்துடன் ப்ரமித்துப்போய்ப் பார்க்கிறான். வாய் திறந்து பேசுவதற்கும் தெரியாமல் விழிக்கிறான்.

மகா யூகசாலியான புஷ்பா இவனுடைய தடுமாற்றத்தைத் தெரிந்துகொண்டு சடக்கென்று சுந்தரத்தை ஒரு

முறை பார்த்தாள். எதுவும் பேசாதே. என்று ஜாடையாகச் சொல்லியவாறு...குட்டியண்ணு

காலையிலேயே தலைவலி...ஜுரமாக இருந்ததே, இப்போது எப்படி இருக்கிறது? என்று அவனே ப்ரமிக்கும்படிக்கேட்டதைக் கண்டு இன்னும் தடமாடிய சுந்தரம் தவித்துப் போனுன். எஜமானரும் ஒன்றுமே தோன்ருமல் வியப்புடன் புஷ்பாவை நோக்கினர். ஒரு சின்னஞ்சிறு பெண்ணுக்கு இத்தனை தைரியமா! அக்காளின் போக்கு ஒருவிதமான அஸுர தைரியம் என்றால் தங்கையின், துணிச்சல் மற்றொரு விதமாக இருக்கிறதே...பணத்திற்கு எப்படிச் சமாளிப்பது என்று சுந்தரம் கண்ணீர்விட்டுக்கலங்குவதற்குள் பணத்துடன் பெண்ணே வந்திருப்பதைக்கண்டு வியக்காமல்எப்படி இருக்கமுடியும்? எந்தவிதம் பணத்தைச்சமாளித்திருப்பார்கள் என்று சற்றுயோசித்தபடியே பணத்தை எண்ணினர்.

சுந்தரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படி புஷ்பா பணத்துடன் வந்திருப்பாள்? ஒருவேளை சற்று முன்பு நான் அநீதமான வழியில் ப்ரவேசிக்கத் துணிந்து வீட்டிற்குக்கிளம்பியதுபோல் புஷ்பாவும் அதேவகையில் துணிந்து செய்திருப்பாளா, அல்லது அப்பா எங்காவது போய் வாங்கிவந்திருப்பாரா?... அப்படித்தான் வாங்கிவந்திருந்தால் தானே நேரில் கொண்டு கொடுக்காமல் எதற்காக இந்தச் சின்னஞ்சிறுமியின் கையில் கொடுத்தனுப்பி இருக்கவேண்டும்? எல்லாம் ஒரே மூடுமந்திரமாயிருக்கிறதே! என்று குழம்பித்தவிக்கிறுன்.

ஸார்! நேரமாகிறது. அப்பா, அம்மா இருவருக்கும் உடம்பு சரியில்லை; நான் சீக்கிரம் போகவேண்டும். ரசீது கொடுங்கள். அப்பா இதையே எதிர்பார்த்திருப்பார்! என்று சமத்காரமாகக்கேட்டாள்.

எஜமா:—இதோ தருகிறேன் உட்காரம்மா! இப்போது தான் சுந்தரம் மிகவும் வருத்தப்பட்டான். கடவுள் கிருபையால் எப்படியோ கிடைத்துவிட்டது, என்று கூறிக்கொண்டே ரசீதைக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்ட புஷ்பா, நமஸ்காரம் மிகமிக வந்தனம்! நான்வருகிறேன். எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றும்வள்ளலாகிய உங்களை பகவான் ரக்ஷிக்க வேண்டுகிறேன் என்று பெரிய நூற்றுப்பாட்டியைப்போல் சொல்லிவிட்டுச் சுந்தரத்தைப்பார்த்து.......நான்போய்வருகிறேன், நீஉடம்பு இருக்கும்நிலையைப் பார்த்துக்கொண்டுசெய்! என்று வெகு கம்பீரமாகக் கூறிவிட்டு மறைந்தாள்! சுந்தரத்தின் மன அதிர்ச்சியொருபுறம் கணக்கற்ற எண்ணங்களாகிய ரங்கராட்டினத்தில் சுற்றுகிறது; எஜமானருடைய நெஞ்சிலும் ஏதேதோ எண்ணங்களும் யோசனைகளும் புயல் போல் அடித்தன.

பெண்களும், சமூகசேவையும்

வசுமதி ராமஸ்வாமி

பெண்கள், சமூகசேவை இவை இரண்டையும் பிரிப்பது உயிரையும், உடலையும் பிரிப்பதுபோன்ற செய்கை. தற்காலத்தில் தான் சமூக சேவை நாம் தனித்துச் செய்கிறோமென்பதில்லை. ஆண்களைவிடப் பெண்களுக்குப் பரோபகாரம், இளகிய நெஞ்சம் இயற்கையில் அதிகம். உடல் பலக்குறைவான பெண் இனத்திற்கு மனோபலம் அதிகம்; புத்தி தீக்ஷண்யம் அதிகம். ஒருபெண் குழந்தைக்கும், ஒரு ஆண் குழந்தைக்கும் சேர்ந்தாப்போல் எந்த வித்தையையும் கற்றுக்கொடுத்து பரீக்ஷை செய்யலாம். பெண் குழந்தை ஆணைவிட அதிசிக்கிரத்திலேயே கிரகித்துக்கொள்வாள்.

சீதாதேவி தன்னைப்போன்றபெண்கள் ராவணனுடையசிறையில் துன்புறுவதை விடுதலைசெய்யவே தான் சிறைசென்றாளென அறிவாளிகள் வால்மீகி சுலோகத்துக்கு அர்த்தம் சொல்லுகிறார்கள். ராமர் தன்னிடம் சரணாகதி அடைந்தவர்களைமட்டும் ரக்ஷித்தார். சீதை தேடிச்சென்று அபயம் கொடுத்தார். தேவி இம்மாதிரி சமூக சேவைசெய்யப் புகுந்தார். இது தன்னுடைய கடமையாக மனதோடு உடலோடு ஒட்டிய விஷயம். அது புறம்பானதல்ல. அரசியல் விஷயமும்; சமூகசேவையும் பெண்களின் மற்ற கடமைகளைப்போன்றுதான் இருந்தது. இன்று நாம் சமூக சேவை செய்வது அதிகப்படியான வேலையாகவோ, அல்லது தற்காலத்து நாகரீகமென்றோ சிலர் நினைக்கிறார்கள். அது மிகமிகத் தவறு.

தனித்தனியே உண்டு உறங்கி உணர்ச்சிவசப்பட்டு வாழும் நான்கு அறிவுள்ள காட்டு மிருகமில்லை மக்கள்.

கூடிவாழும் நாட்டுமிருகங்கள்; அன்புச்சங்கிலியால் கட்டுண்டு இன்ப வாழ்க்கை வாழும் கூட்டுறவுப் பிராணிகள்; ஆறாவது அறிவைப்பெற்று பகுத்தறிவு அடைந்த பிறவிகள். அரிது அரிது மானிடப் பிறவி அரிது என மகான்கள் ஆனந்தமெய்தியிருக்கிறார்கள். பிறரிடம் அன்பு செய்வது பிறமக்களைப்போற்றுவது தேற்றுவது இவைகளில் மகத்தான இன்பம், விலை மதிப்பற்ற ஆத்ம த்ருப்தியை அடைகிறோம். உலகம் இன்பமயமானது: அன்புமயமானது. அதில் பெண்கள் ஆக்கசக்திபடைத்த அன்புவடிவம். எனவே அன்பின்சின்னமான தியாகம், சேவை, தன்னலமற்ற நினைவு, இவைகள் பெண்களின் தனி சக்திகள்.

சமூகசேவை சக்தியின் வழிபாடு. அப்படியே கலைமகளின் வழிபாடு பிறருடைய கலைகளைப்போற்றி பெருமை அடைவது. பழைய காலத்தில் வாழ்க்கை இவ்வளவு வேகமில்லை; கலையின் சிறப்பைப்போற்ற நவராத்திரி கல்யாணம்என்று ஏற்படுத்துவார்கள். அச்சமயம் சுற்றத்தினரில் அழகாகக் கோலம் இடுபவர்கள் இருந்தால் அழகாய்ப் போடச்செய்து மற்றவர்கள் பொறாமையின்றி கண்டு ஆனந்திப்பார்கள். ஊஞ்சல், நலங்கு என கல்யாண தம்பதிகளை வைத்து பாடி ஆடி மகிழ்வார்கள். இனிய சாரீரம் படைத்த பெண்கள்பாட மற்றவர்கள் சூழ்ந்து ஆனந்திப்பார்கள். இன்னும் ஆதிகாலத்தில் சங்கீத வித்வான்கள் பண்டிதர்களை அரசன் சபையில் ஆதரிப்பார்கள். பிறநாட்டு வித்வான்களுடன் போட்டா போட்டிக்கு வருவார்கள். மக்கள் குதூகல

மடைவார்கள்; அரசனுடைய விசேஷ தினங்களில் வித்வான்களுக்குப் பட்டம் வழங்கிப் பொன்னுடை உடுத்தி இவைகளைக் கொண்டாட்டமாகச் செய்வார்கள்.

இன்று சுதந்திர நாட்டில் நாம் அனைவரும் அரசிகள்; இதை நாம் உணர்ந்து கொள்ளக்கூடிய அநேகசந்தர்ப்பங்கள் வருகிறது; சென்றமாதம் காயனபடு கீர்த்தனபடு ஸரஸ்வதிபய் அம்மையாருக்கு அறுபது ஆண்டு பூர்த்தி விழா நடந்தது. ரசிகர்கள் அன்பர்கள், அம்மையாருக்குப் பட்டம் வழங்கி, பொன்னுடை போர்த்தினார்கள். ஆண்களும் பெண்களும் தங்கள் சஷ்டியப்த பூர்த்தி விழாபோல் ஆனந்தித்தார்கள். தேவேந்திர சபைபோல் மகோன்னதமாக இருந்தது. அதைப்பார்க்கும்பொழுது இம்மாதிரி ரஸிகக்கூட்டம் உள்ளவரை நமநாடு கலைக் கூடமாக விளங்குமென்பதில் என்ன சந்தேகம் என நினைத்தேன்.

பொதுமக்களை முந்திக்கொண்டு மகாத்மாஜீ சேவா சங்கத்தினர் அம்மையின் அறுபது ஆண்டு விழாவைக் கொண்டாடினார்கள். "கற்றாரைக் கற்றாரே கண்டு காமுறுவர்" எனச் சொல்வதுண்டு; அவருடைய வித்தையை அறிந்து ஆனந்திக்கக்கூடிய மகா பண்டிதர் காஞ்சிபுரம் அண்ணங்கராசார்ய சுவாமிகள் தலைமை தாங்கிநடத்தினார். பாண்டித்தியத்தின் சின்னம் வினயம்; அறிவு பழுத்ததற்கு அடையாளம் அடக்கம். அதை அன்று கண்கூடாகக் கண்டோம்; மாபெரும் கூட்டத்தில் மணமகன், மணமகளாக அம்மைமாலையோடு காட்சியளித்தது பெண்கள்மனதைப் பரவசப்படுத்தியது; இம்மாதிரி வித்தையைப் போற்றி பெருமை படுத்தியதில் சங்கம் பெருமை அடைந்தது; ஹரிகதை பெருமை அடைந்தது; அன்று சங்கீத ஹரிகதா கலாநிதி என்ற பட்டம் வழங்கி கங்கணம் அளித்துப்பாராட்டினார்கள். கலை, மக்கள் மனத்தில் படியும் பாசிகளை அகற்றும் மாமருந்து; மனதைப் பரிசுத்தம் செய்யும் ஸ்படிகஜலம்.

தீனர்களுக்கு கஷ்டப்படுபவர்களுக்கு ஆதரவு அளித்து அன்னமிடுவது மட்டும் சங்கத்தின் சமூக ஸேவையல்ல; வித்தையைப் போற்றி பெருமைப் படுவதும் சங்கத்தின் முக்கிய நோக்கம். மனம் பிறருக்குத் தீங்கு இழைப்பதிலோ, வம்பு பேசுவதிலோ செல்லாமல் தடுப்பதற்கு கடவுளால் அனேக இன்ப பாதைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; அவைகளில் நாம் கல்லையும், முள்ளையும் வாரிப்போட்டுவிட்டுத் தவிப்பது நம் கண்ணில் மண்ணைப் போட்டுக்கொள்வது போன்ற செய்கைதான். "கற்றது கையளவு, கல்லாதது உலகளவு" நாம் அறிந்துகொள்ளவும், தெரிந்துகொள்ளவும் மலைபோன்ற விஷயங்கள் இருக்கின்றன. எனவே பத்துப் பெண்களாய் ஆண்டாள் பாடியதுபோல சங்கம் ஏற்போம்; அன்புப்பணி செய்வோம்; அதுதொன்று தொட்டு நம்மிடை ஊடுருவிய ஒரு நல் வழக்கம்; அங்கு ஒற்றுமை அன்பு இந்த விதைகளை ஊன்றி வளர்த்தால் அது மரமாகும்; பெண்கள் சக்தியை வீண் விரயமின்றி தேசத்துக்கும் சமூகத்திற்கும் உழைத்த மற்றப் பெண்களைப்பற்றிச் சொல்லுகிறேன்...நாம் அனைவரும் சீதாதேவியின் அம்சம்: தேடிச்சென்று பணி ஆற்ற நாம் தயங்கவேண்டாம்!

ஹிந்திக்கதை

மொழி பெயர்ப்பு
"ஹரிணி"

நம்பிக்கை

"அப்பப்பா! பார்த்தாலும் பார்த்தேன். இந்தமாதிரி துஷ்டப்பிள்ளையை எங்கேயும் பார்த்ததில்லை." என்றாள் மல்லிநாதனுடைய தாய்.

ஆமாம். அவள் சொல்லுவது நிஜம்தான். ஒவ்வொரு நாளும், மல்லி படுத்துகிறபாடு சொல்லிமுடியாது. அதுவும் கமலாவை 'சீண்டு' வதென்றால் அவனுக்கு ரொம்பஉத்சாகம். எதெற்கெடுத்தாலும் போட்டி. அவனுக்கு எப்பொழுது ஐந்து வயது நிறையப் போகிறதோ, பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டு நிம்மதியாக இருக்கப் போகிறோமோ, என்று நினைத்தாள் மல்லியின் தாயார்.

கமலா மல்லிநாதனுடைய அக்கா. அவளுக்கு ஆறு வயது. மிக்க சாதுக் குழந்தை, தினமும் அவள் தம்பியிடம் அவனுக்குத் தோல்விதான். ஒவ்வொருநாளும் அவனுடைய அக்ரமங்களுக்குத் தலை வணங்கித்தான் போக நேரிடும். எப்படியாவது அந்த துஷ்டப்பிள்ளை ஜயித்துவிடுவான்.

மாலை, நான்குமணி யிருக்கும். சமையலறைக் கதவை உடைத்துக்கொண்டே சிணுங்கிக்கொண்டிருந்தான் மல்லிநாதன். அவனுக்குத்தான் பிடிவாதம் உண்டல்லவா! பிடிவாதம் வந்துவிட்டால் விளையாட்டுகூட வேண்டாம். கமலா மேல்மாடியில் காற்றுடி வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தாள். திடீரென்று ஒரு காற்றுடி பறந்துவந்து அவள் காலடியில் விழுந்தது. அவ்வளவுதான் ஆனந்தமிகுதியினால் குதித்துக்கொண்டே "மல்லி! ஓடிவாடா! காத்தாடி! காத்தாடி! என்று கூச்சலிட்டாள். குழந்தை மனது பின்னால் வருவதைப்பற்றி யோசிக்கும் சக்தி எது? சந்தோஷத்தில் கலந்துக்கொள்ளத் தன் அருமைத் தம்பியை ஆவலுடன் கூவி அழைத்தாள்.

மல்லியின் அழுகை பறந்துவிட்டது. பாய்ந்து ஓடிவந்தான். காற்றுடி அவன் மனதைக் கவர்ந்தது. "அந்தக் காத்தாடி என்னுது தெரியுமா? அது எனக்குத்தான். கொடுடி" என்று அவள்மீது பாய்ந்து அதை எடுக்க முயன்றான்.

"ஐயோ! அம்மா! பாருடி! என் காத்தாடியைப் பிடுங்குறான்!" என்று கையைத் தூக்கியபடி கூச்சலிட்டாள் கமலா! மல்லி அவள் பாவாடையைப் பிடித்திழுத்து, குதித்து, அவள் கையியிலுள்ள காற்றுடியை வாங்க முயன்றான்.

"அடேய்! மல்லி! இதோ வரேன், இரு. அக்காவுடன் சண்டை போடக்கூடாதுடா. வந்து அடிக்கிறேன் பார்" என்று மிரட்டினாள் தாயார்.

மல்லிதான் துஷ்டப் பையனாயிற்றே, இதற்கெல்லாம் மிரண்டு விடுவானா? கமலாவின் பின்னலைப்பிடித்து இழுத்து, முதுகில் குத்தி ஹிம்ஸைசெய்ய ஆரம்பித்தான். கமலா ஓவென்று அழுது கூச்சலிட்டாள். தாயார் ஓடிவந்தாள். ஆனால் வந்து மட்டும் என்ன! மல்லியை அவளால் என்ன செய்ய முடிந்தது?

'கமலா! என் கண்ணோல்லியோ! கொடுத்துடும்மா! அதுதான் மகா பொல்லாது. வரவர துஷ்டத்தனம் முத்தராது: இருக்கட்டும்.

அவப்பாவே வரட்டும். நல்ல அடி வாங்கித்தரலாம். உனக்கு நான் பெரிய காத்தாடி வாங்கித்தரேன், சமத்துக் கண்ணு! கொடுத்துடும்மா'! ''என்று கொஞ்சிக்கொஞ்சி கூறினுள்.

கமலா உடனே கொடுத்து விட்டாள். ஆனல் அவள் முகத்தில் தோன்றிய ஏக்கம்! அதை யார் கவனிக்கிருர்கள்? ''சமத்துக் குட்டி! கமலாவுக்குதான் நிறைய பக்ஷணம் வா! வா! உனக்கு வழி சொல்லுகிறேன்'' என்று மிரட்டியவண்ணம் கீழே போனுள் அம்மா. கமலா அழுதபடியே அவள் பின்னே சென்ருள். மல்லி காற்றுடியை ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டுவிட்டான். சிறிது நேரத்தில் காற்றுடி உருப்படி இல்லாமல் சின்னுபின்னமாகியது.

மற்றொருநாள் மல்லியின் தகப்பனர் நான்கு மாம்பழங்கள் வாங்கி வந்தார். அதை எங்கேயாவது ஒளித்து வைக்கப்பாடு பட்டாள் அம்மா. ஆனுல் மல்லியை ஏமாற்றமுடியுமா? எப்படியோ தெரிந்து விட்டது. உடனே தன்னுடைய பலமான ஒரே ஆயுதத்தைப் பிரயோகம் செய்யத்தொடங்கினுன். அவ்வளவு தான், சமையலறைக் கதவு உடைபட்டது. அந்த ஓசைக்கு ஒத்த படி ஒரேஸ்வரத்தில் ராகம் பாடத்தொடங்கி விட்டான்.

தாயார் தோல்வியடைந்தாள். இரண்டு கையிலும் இரண்டு மாம் பழங்கள் வந்துவிட்டன. அடுத்த நிமிஷம் ஓட்டமெடுத்தான் மல்லி. கமலா பள்ளிக்கூடத்திலிருந்து வந்தாள். அவளிடம் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து ''போடி! ஓடு அந்தப் பக்கம்போய் தின்னு, அந்தப்பிசாசு வந்துடப்போரது! என்ருள் அம்மா.

ஆனல் மல்லி சமயத்திற்கு எங்கேயிருந்தோ வந்து விட்டான். வெடுக்கென்று அவள் கையிலுள்ள மாம்பழத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓட்டமெடுத்தான்.

கமலாவினுல் என்ன செய்ய முடியும்? அழுகைதான் அவளுடைய ஆயுதம். ஆனல் அந்த ஆயுதத்திற்குப் பலமேது? அம்மாவிடம் முறையிட்டாள். தாயார் பிரம்பை எடுத்துக்கொண்டு ஓடிவந்தாள். ஆனுல் அதற்குள் அவன் மாம்பழத்தைத் தின்று விட்டு, முகம், சட்டை எல்லாம் மாம்பழரசம் வழிய நின்று கொண்டிருந்தான். கமலாவின் பரிதாப அழுகை என் மனதைக் கறைத்து விட்டது; அவளை அருகிலழைத்துச் சமாதானம் செய்து, பிறகு கடைக்கு அழைத்துச் சென்றேன். அவளுக்கு ஒருநல்ல பொம்மை வாங்கிக் கொடுத்து அவள் மனதைத்தேற்றி அழைத்து வந்தேன். மறுநாள், கமலா தன் புதிய பொம்மையுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். பார்த்தான் மல்லிநாதன்; அந்த பொம்மை அவன் மனதைக் கவர்ந்து விட்டது. உடனே அதன் மீது பாய்ந்தான். கமலா நடுங்கியவண்ணம் பொம்மையைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு நின்ருள். ஒருகொடிய அசுரனிடமிருந்து தன்னருமைக் குழந்தையைக் காப்பாற்ற முயலும் தாயாரைப்போல, அதைத் தன் இதயத்துடன் சேர்த்தணைத்துக் கொண்டு மிரள மிரள விழித்துக்கொண்டு நின்ருள்.

அடுத்த நிமிஷம் அவள் முதுகு பிளந்தது. ஐயோ! ஐயோ! வென்ற கூக்குரல். ஒரே அமர்க்களம். அம்மா ஓடி வந்தாள். அவளைக்கண்டதும் அந்தப் பொல்லாத சிறுவன், கீழே விழுந்து, கைகால்களை உதைத்துக்கொண்டு அழ ஆரம்பித்து விட்டான்.

எவ்வளவுதான் சமாதானம் சொல்லியும் பலிக்கவில்லை. பொம்மை அவன் கைக்கு மாறிவிட்டது. மறுபடியும் புதியபுதிய பொம்மைகள் வாங்கித் தருவதாகக் குழந்தைக் கமலாவுக்கு ஆசைகாட்டிச் சந்தோஷப்படுத்திச் சமாதானம் செய்தேன்.

கமலா எல்லா அநியாயங்களையும், அக்ரமங்களையும் சகித்துக் கொண்டிருந்தாள், அதற்குப் பதிலாக அவளுக்குக் கிடைத்தது என்ன? அநேகவிதமான ஆசைவார்த்தைகளும், வாக்குத்தத் தமும்தான்! கையில் வந்து சேர்ந்தது என்ன? ஒன்றும் கிடையாது. மனதில், அந்தக் குழந்தை உள்ளத்தில் ஏக்கமும், ஏமாற்றமும்தான் நிரம்பியது; மல்லிநாதன் ஆசைவார்த்தை களையோ, வாக்குத்தத்தத்தையோ, லக்ஷ்யம் செய்வதேஇல்லை; கண்ணெதிரே எதைப்பார்க்கிருனே அதை அடைந்துவிட வேண்டும்; அவ்வளவுதான் அவன் எண்ணம். அவன் குதிப்பான்; கூச்சலிடுவான்; சளைக்காமல் விளையாடுவான். கமலா தன்னுடைய பெரிய அழகிய கண்களை மிரளமிரள விழித்துப் பார்த்தவண்ணம் வரப்போகிற சாமான்களைப் பற்றிய கற்பனையில் மூழ்கி ஆனந்த மடைந்துக் கொண்டிருப்பாள்.

இதைக்கண்ட நான் அடிக்கடி யோசனையில் ஆழ்ந்து விடுவேன்; இவர்களில் யார் ஜயமுள்ளவர்கள்? யாருடைய சுபாவம் உயர்ந்தது! உபயோகமுள்ளது! என்ற யோசனையில் ஈடு பட்டுவிடுவேன்.

"இந்தப்பிசாசைப்பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடு, உனக்குக் கோடி புண்ணியமுண்டு" என்று ஒருநாள் மல்லியின் தாய்—என் அக்கா—என்னிடம் கூறினள்.

"வேண்டாம்! வேண்டாம் இப்பொழுதுமுதல் படித்தால் பையன் பலஹீனமாகி விடுவான்; இன்னுமிரண்டு வருஷம் போகட்டுமே!" என்றேன் சிரித்துக் கொண்டே.

"ஐயோ! இரண்டுவருஷமா! அதுவரை இதைக்கட்டிமேய்க்க யாரால் முடியும்?" என்று சொல்லும்போது அவள் குரலில் பெருமைதான் தொனித்தது! நல்ல பல சாலியும், கெட்டிக்காரனும், தைர்யமும் உள்ள தன் பிள்ளையைப் பார்த்து அவள் மனம் பூரித்தது. "அம்மா! பிச்சை போடுங்களம்மா!" என்று வாசலில் கூச்சலிட்டான் பிச்சைக்காரன். "கைவேலையாயிருக்கிறேன். போகச் சொல்லுடா!" என்ருள் என் அக்கா. அடுத்த நிமிஷம்,

"அம்மணி! உங்க குழந்தை குட்டிங்க நல்லாயிருக்கணும். எனக்கு ஒரே ஒரு காசு கொடுங்க. கடவுள் உங்களுக்குப் பவுன கொடுப்பாரு." என்ற அவன் வார்த்தை அவள் மனதை மாற்றி விட்டது. "அடே! மல்லி' இந்தாடா! இந்தக் காலணவை அவனுக் குக்கொடு" என்ருள். நான் மறுபடியும் யோசனையிலாழ்ந்தேன். "குழந்தை கமலா மட்டும் எதிர்காலத்தின் ஆசை, சமாதானம் இவைகளின் மீதுள்ள நம்பிக்கையினல் பிழைத்திருக்கவில்லை. அவளுடைய தாய்—எல்லாம் தெரிந்த வயதுநிறைந்த தாய்கூட எதிர்காலத்தின் ஆசைகளில் தான் நம்பிக்கை வைத்திருக்கிருள். பிச்சைக்காரனுடைய நல்ல வார்த்தைக்கு மயங்கி காசுகொடுக் கிருள். அனுதாலயத்திற்கு சந்தா செலுத்துகிருள். விரதம் செய்கிருள். ஏன்? கமலாவின் தாய் மட்டுமா? நாம் எல்லாரும்

தான்— இந்தியாவில் பிறந்த நாம் எதிர்காலத்தின் ஆசைமீது தான் வாழ்கின்றோம். உலகமே வருங்காலத்தின் நம்பிக்கையிலே தான் வாழ்ந்துக்கொண்டிருக்கிறது.

"பரலோகம். ஆம். பரலோகத்தில் சுகத்தை அடையலாம். நியாயமாக, தர்மமாக நடந்தால் மறுஜன்மம் நமக்கு உயர்ந்ததாக கிடைக்கும்" எனும் ஆசையினாலேயே நாம் எந்தவிதமான கஷ்டத்தையும் சகித்துக்கொள்ளத் தயாராயிருக்கிறோம். உலக இச்சைகளில் ஆசை வைத்தல், அழியும் அநித்யப் பொருள்களில் ஆசை வைப்பது, பரலோக சுகத்திற்கு இடையூறுகும். ஆகையினால் நாம் அதைத் திரும்பிப் பார்க்கக்கூடாது" என்றெல்லாம் நம்மையே நாம் சமாதானம் செய்துக்கொள்ளுகிறோம். ஏன்? இந்த உலகத்தில் நமது ஆசைகள் நிறைவேறுவிட்டால், அதற்காக மனம் உடைந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ளவே அந்த நம்பிக்கை.

மனம் சாதாரணமாக எல்லாவிஷயத்திலும், நிறைந்திருக்க ஆசைக்கொள்ளும், ஆனால் அந்த மனதை "ஆசைகூடாது. அடக்கம்வேண்டும். உலக இச்சைகளில் ஈடுபடுவதுபாவம், பேராசையை அடக்கு" என்று கூறி அந்த மனதைச் சமாதானப்படுத்துவோம்.

ஒருவன் தவறு செய்தால், அவனுடன் போராட சக்தியில்லை. அதறகாக, "கடவுள் அவனைத் தண்டிப்பார்" என்று கூறி நமது பலஹீனத்தை மறைக்க முயலுகிறோம். ஆம், நாம் பார்த்துக் கொண்டேதானிருக்கிறோம். இந்த நமது சமூகம் முழுவதுமே கமலாவைப்போல் வருங்காலத்தின்மீது நம்பிக்கை வைத்துத் தான் உயிர் வாழ்ந்துக்கொண்டிருக்கிறது; மற்றவர் (மேல் நாட்டினர்) மல்லிநாதனைப் போல் இன்றைய உத்தேசத்தில், இன்றைய சுகத்தில் ஈடுபட்டு, அதற்காக முயன்று பாடுபட்டு உழைத்து, அன்றன்று நடக்கவேண்டிய காரியத்தைத் தீர்மானிப்பதில் சுய நலத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்; ஆயிரக்கணக்கான வாக்குதத்தங்களையும், ஆசை வார்த்தைகளையும அடைந்தும்கூட கமலா ஒரு நாளும் மல்லியைக் காட்டிலும் வெற்றி அடைந்துவிட வில்லை.

முயற்சியும், உழைப்பும், தைர்யமும் உள்ள குழந்தையைப் பார்த்துக் கடவுள் "சபாஷ்! குழந்தாய்! என்றுதான சந்தோஷப் படுவாரா? "பயப்படாதே! குழந்தாய்! உனக்குப் பரலோகமிருக்கிறது" என்று தட்டிக்கொடுப்பாரா? என்ற எண்ண அலைகள் என் மனதில் மோதி எழுந்தன.

"உழைப்பும் தைரியமும் உள்ள மக்களின் வாழ்வு சுகமடையுமா? கறபனையும், கையாலாகாதத் தன்மையும், சாதுகுணமும் வெற்றியடையுமா?" என்று கேட்டது என்மனம்; இப்பொழுது நான் கற்பனை உலகில் திரிந்துக்கொண்டிருந்தேன்;

"ஐயோ! பாருடியம்மா! என் புஸ்தகத்தை எடுக்கிறான்!' என்று கூச்சலிட்ட கமலாவின் குரல் என்னைச் சிந்தனை உலகத்திலிருந்து திருப்பி அழைத்தது,

"உழைப்பவனுக்குத்தான் உன்னதவாழ்வு, கற்பனைக்கோட்டையில் வாழந்து, சோம்பலாக உட்கார்ந்திருப்பவனுக்குக் கசப்பான வாழ்வுதான்" என்று ஏதோ ஒரு குரல் எங்கேயோ ஒலித்தது

183176

அரிய தமிழ் விருந்து (தொடர்ச்சி)

ராணி சீலாவதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
நான்காவது நவீனம் - ரூ-1/-

1. உபன்யாசமும் உதாசினமும். 2. பேய்க்குக் கள் வார்த்த கதைதான் 3. வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே 4. நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும். 6. வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும்—சூழ்ச்சியின் வீழ்ச்சி 8. இனம் இனத்தைச் சேரும்—தூபமும் தாபமும். 9. விதையும் அறுவடையும் 10. தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12. ராஜரிஷியின் இதய கீதம்.

பெண்மணிக்கனல்

சரித்திரஜோதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

சரித்திர ஜோதி— 1. ஸ்தலமும் காலமும் 2. அஸ்திவாரம் 3. கபடநாடகமும் சூழ்ச்சிமேல்சூழ்ச்சியும் 4. இறுதிமொழியும் உறுதிப்பாடும் 5. சிங்கமும் புலியும் 6. வீழ்ச்சியும் மீட்சியும்

"கண்முனே காட்டினுள் பெண்மணிக்கனலை, பெண் சக்தியின் சிறப்பை, குன்று உறுதியின் எல்லையை, மனமுண்டானல் மார்க்கமுண்டு என்ற உண்மையை! இந்திய சமஸ்தானங்களுள் பலவிதத்திலும் முன்னணியில் நிற்கும் மேன்மையை இன்று மைசூர் பெற்றிருப்பதற்கு உண்மையான அஸ்திவாரமிட்டவள் மாதரசி லக்ஷ்மி அம்மணியே!"

இருளில் ஒளி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஆறுவது சுடர் ரூ. 1.40

முதல் பாகம்—1. இருளில் ஒளி 2. திருமகளின் திருவருள் 3. கனியும் கன்னியும் 4. உள்ளும் புறமும் 5. உள்ளொளி 6. மனநிம்மதி 7. ஒளியும் ஒலியும்.

இரண்டாம் பாகம்—1. ஒருபக்தனின் சந்தேகநிவ்ருத்தி 2. கோலும் கொடியும் 3. லகுவான உபாயம் 4. முடிவும் நடுவும் 5. தெய்விக இசையின் அத்புத சக்தி 6. மலையில் மலை 7. கோபியரும் உத்தவரும்.

அஜந்தா சித்திரங்கள்

அஜந்தா ஓவியங்களில் காணப்படும் வனிதாமணிகளின் வனப்பும் தேக அமைப்பும் இன்றையஸ்த்ரீகள் பலரிடத்தில் காண்பதரிதாயிருக்கிறது; விறுபெற்ற தாய்மைக்கு லாயக்கற்றவர்களாயுள்ளனர் பலர்.

அருணவை அனுதினமும் உபயோகித்தால் ஸத்ரீகளின் ப்ரத்யேகக் கோளாறுகளனைத்தும் தீர்ந்து திடகாத்திரமும் தூய்மையான தாய்மையும் ஸித்திக்கும்

அருணா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கர்ப்பாசயரோகங்களை நிவர்த்தித்து பெண்மைக்குப் பெருமையளிக்கும் ஔடதம்.

ஆயுர்வேதாச்ரமம் லிமிடெட்
சென்னை. 17.

வை. மு. கோ. நாவல்கள்
(தற்போது கைவசமுள்ளவை : 1953)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (இனேஸ்)
மலர்ந்த இதழ்

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்விக ஒளி
அமாத்யாகி
ஜீவநாடி
பாதாஞ்சலி

ரூ. 1 12
அனாதைப்பெண்
புகாமாலை
கலாநிலயம்
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியன்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு

இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை
நம்பிக்கைப்பாலம்

ரூ. 1-4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்

அணா. 8
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jagan Mohini Press, 26, Car St., Triplicane, Madras. 5. *Managing Editor:* V. M. SRINIVASAN, M. A.B. L.